பக்கங்கள்-16 | 19.கார்த்திகை.2023 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 421



## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும் ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?




## தமிழின விடுதலைக்காகத் தம்மை ஈந்து எமது மண்ணில் விதையாகிப்போன மாவீரர்கள்



## இனப்படுகொலையை நியாயப்படுத்த சமூக ஊடக பிரபலங்களை விலைக்கு வாங்கும் இஸ்ரேல்

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்







**கேள்வி : சர்வதேச விசாரணை வேண்டாம் என்கிற அடிப்படையில் ஜனாதிபதி கூறிய கருத்தானது தமிழ் மக்களின் தீர்வுக்கான விடயங்களில் பாரிய தாக்கத்தினை செலுத்தியிருக்கிறது. இவ்விடயம் பற்றிய உங்களின் கருத்து என்ன?**

**பதில் :** சர்வதேச விசாரணை என்கிற விடயம், குறிப்பாக ஈழப்போரின் இறுதிக்கட்ட யுத்தத்தில் எமது ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள், காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள், இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்தவர்கள் அதேநேரம் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் அவர்கள் மாயமாக உயிரிழந்த நிலை என பல காணொளிகள் ஆதாரங்களாக இருக்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தரப்பாகிய நாங்கள் தமிழ் மக்கள் இணைந்து தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையொன்றின் மூலமாகத்தான் இதற்கான நீதியினைக் காண முடியும் எனக் கூறியிருக்கின்றோம். விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட காலம் முதல் நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த நேரங்களில் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் தற்போதுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சர்வதேச விசாரணை என்பது இலங்கையின் நீதிமன்றங்களை அவமதிக்கின்றசெயல், இலங்கையின் நீதிமன்றங்களுக்கு குற்றங்களை விசாரிக்கின்ற தகுதி இருக்கின்றது. சர்வதேச விசாரணையின் மூலமாக நாட்டுக்குள் வெளிநாட்டினர் வருவதை எதிர்த்தவர்கள் கூட, இன்று சர்வதேச விசாரணை தேவை என்கிற நிலைப்பாட்டுக்குள் வந்திருக்கின்றார்கள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சனல் 4 காணொளி வெளியாகிய பின்னரும் அதற்கு முன்பிருந்தும்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணியில் பல சந்தேகங்கள் இருப்பதாக கருத்துக்கள் வந்தவுடன் இதற்கு சர்வதேச விசாரணை தான் தீர்வு என்று கூறினார்கள். ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னர் பலரும் சர்வதேச விசாரணையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கடந்த காலங்களில் சர்வதேச விசாரணை தேவை என்று கூறினார். கடந்த காலத்தில் தேவையில்லை என்று கூறியவர்கள் இன்று தேவை என்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2016-17 ஆம் ஆண்டுகளில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கிய அந்த பிரேரணையில் கூட சர்வதேச மேற்பார்வை அவசியம் அதற்கு நாங்கள் இணங்குகிறோம் என்று கூட எழுத்து மூலம் இருக்கின்றது.

அதேநேரம் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராக இருந்த காலப் பகுதியிலும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவிருந்த போது, ஸ்கொட்லாண்ட் இல் இருக்கும் விசேட பொலிஸாரை அழைத்து விசாரணை செய்யவேண்டும், இதற்கு ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறியவர். இன்று தான் ஜனாதிபதி கதிரைக்கு வந்ததன் பின்னர் வேண்டாம் என்று கூறுகின்றார்.

இதில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறிய விடயத்திலிருந்து சற்றுப் பின்நோக்கி, ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய நிலையினை ஆராய்ந்தால் அவர் தற்போது மிகவும் பலமிழந்த ஜனாதிபதியாக இருக்கிறாரா? என்கிற சந்தேகம் வருகிறது. உதாரணமாக ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களுக்கு பாராளுமன்றத்திலோ அல்லது அமைச்சரவையிலோ அங்கீகாரம் இருக்கிறதா என்கிற சந்தேகம் வருகிறது.

இதற்கு உதாரணமாக, தற்போது மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் பல தடவைகள் கலந்துரையாடி, ஐ.நா மனித உரிமைப் பேரவையில் உரையாற்றியிருக்கிறோம்.

இவ்விடயம் ஐ.நாவின் அறிக்கையிலும் வெளிவந்துள்ளது. இந்த நில அபகரிப்பு என்பது தமிழர்களின் ஒரு வகை இனவழிப்பு என்று. நான் அறிந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தக் குடியேற்றங்களை நிறுத்துங்கள் என்று மகாவலி அதிகார சபைக்கு தற்போது அமைச்சராக இருக்கின்ற ரோஷான் ரணசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். நானும் பாராளுமன்றஉறுப்பினரும்மாலை 2.30 மணியளவில் இவ்விடயம் தொடர்பில் கதைப்பதற்கு ஜனாதிபதியைச் சந்திக்கவிருந்த சூழலில், விமானத் தாமதத்தால் என்னால் அன்றைய தினம் சந்திப்பில் கலந்துகொள்ள முடியவில்லை. எனினும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் ஜனாதிபதியிடம் இவ்விடயம் தொடர்பில் கதைத்தபோது, உடனடியாக ஐஜிபியிடம் பேசுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், அதைக்கூட இன்றுவரை நடைமுறைப்படுத்தாத நிலை இருக்கின்றது.

எனவே ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மொட்டுக் கட்சியினுடைய ஆதரவில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபோது அவருக்கு இருந்த அதிகாரப்பலம் இன்று அவர் தனித்து விடயங்களைச் சுயமாகச் செய்ய இருக்கின்றதா என்கிற சந்தேகம் வலுக்கிறது. திடீரென அவரது மனமாற்றம் என்பது இந்த சர்வதேச விசாரணை விடயத்தில் ஆச்சரியத்தையே ஏற்படுத்துகின்றது.

ஆனால் தமிழ் மக்களது விடயத்தினைப் பொறுத்தவரையில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக வாழும் தமிழ் மக்களும், அதேநேரம் மற்றைய சிறுபான்மை இனமான முஸ்லீம் மக்களும் பாதிக்கப்பட்டனர். ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் மட்டக்களப்பில் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டனர். 2009 ஆம் ஆண்டில் இறுதிக்கட்ட யுத்தத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்களாக இருந்தாலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலாக இருந்தாலும் இவ்விரண்டு சம்பவங்களுக்கும் தீர்வினைப் பெற சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணை என்பது அவசியமானது. இவ்விடயத்தில் நாங்கள் இன்றும் உறுதியாகத்தான் இருக்கிறோம்.

கடந்த காலத்தினைப் பார்த்தால் கோட்டாவின் ஆட்சியில் தமிழருக்கு பிரச்சினையும் இல்லை, அரசியல் தீர்வும் இல்லை, 13ம் இல்லை என்று கூறியவர்கள். ஆனால் கோட்டா தெரிவாகிய நான்கு வருடங்களின் பின்னர் இன்று கோட்டாவே இல்லை என்கிற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதுபோலத்தான் இந்த ரணில் விக்கிரமசிங்கவும். இன்று ஜனாதிபதியாக பதவியில் இருக்கும் அவர், சர்வதேச விசாரணை வேண்டாம் நாங்கள் அதற்கு இணங்க மாட்டோம் எனக் கூறியதற்கு தமிழ் மக்களாகிய நாம் பயம் கொள்ளத் தேவையில்லை. ரணில் இல்லை என்று கூறிவிட்டார் அப்படியானால் எங்களது உண்மைகள் வெளிவராமல் போய்விடுமோ? என்பதல்ல. நாங்கள் இன்னும் முழுமையாக எமது கடமையைச் செய்வோம். இவர்கள் "இல்லை இல்லை" என்று கூறக்கூற அவர்களுக்கான அழுத்தங்கள் தான் அதிகரிக்கும். இன்று ஜனாதிபதியாக ரணில் இருக்கிறார். நாளை ஜனாதிபதியாக யார் இருப்பார்கள் என்பது தெரியாது. ஆனால் நாங்கள் அன்றும் இன்றும் நாளையும் எங்களுக்கான நீதிக்காக தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்துக்கொண்டேதான் இருப்போம்.

எனினும் சிலர் கேட்கலாம், நீங்கள் 2009ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை "நாங்கள் நீதிக்காகப் போராடுகிறோம், அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் எனக் கூறிவருகிறீர்கள். ஆனால் எதுவும் நடைபெறவில்லை" என்று. சில ஆபிரிக்க நாடுகளில் 80-90 களில் நடந்த பிரச்சினைகளுக்கு இன்று தீர்ப்பினை வழங்கி குற்றவாளிகளை நிரூபித்திருக்கிறார்கள். அதாவது கிட்டத்தட்ட 30-40 வருடங்களுக்குப் பிறகு தீர்வுகள் கிடைத்திருக்கிறது. நீதி கிடைப்பது என்பது இரு வகையாக இருக்கிறது. உதாரணமாக நீங்கள் எனது கால் கையினை வெட்டினால் நான் உங்களுடைய கையை வெட்டுவது இன்னொரு முறை. தமிழ் சமூகமாகிய எங்களுக்கு உண்மையைக் கண்டறிதல் மிக மிக முக்கியம். உதாரணமாக இராணுவ சிப்பாய் ஒருவர் தமிழ் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்திருந்தால் அவரைக் கண்டுபிடித்து குற்றவாளி என அடையாளம் கண்டு தண்டனை வழங்க முடியாமல் போகலாம் சிலநேரம். ஏனெனில் இலட்சக்கணக்கான இராணுவம் இருந்தது.

(தொடரும்...)






**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழர்களைக் கையேந்த வைக்கும் சிங்களத்தின் தந்திரம்

இலங்கையின் அண்மைய நாட்கள் மிகவும் பரபரப்பாக அமைந்தது என்று கூறினால் அது மிகையாகாது. கடந்த நாட்களில் தென்பகுதியில் பலத்த மழைவீழ்ச்சியும், மரங்கள் முறிந்து வீழ்ந்து விபத்துக்களை ஏற்படுத்தியதுடன் மாணவர்கள் உட்பட பலர் உயிரிழந்த சம்பவங்களும், உலகக் கோப்பைக் கிரிக்கெட்டில் இலங்கையணி படுதோல்வியடைந்து நாடு திரும்பியதும் அதனுடன் எழுந்த சர்ச்சைகளும், கிரிக்கெட்டின் மீது மக்களுக்கு இருந்த அதீத விருப்பம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட்டின் மீது வெறுப்பும், வீரர்கள் மீது கோபமும் ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இலங்கையின் ஜனாதிபதி ரணில் நிதியமைச்சர் என்ற வகையில் வரவுசெலவுத்திட்டம் – 2024 பாராளுமன்றில் சமர்ப்பித்தார். அதற்கான விவாதங்கள் பாராளுமன்றில் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு தென்னிலங்கையின் பரபரப்பான சூழலில் வடகிழக்குப் பகுதிகளில் ஆசியாவின் இருபெரும் வல்லரசுகளின் தூது வர்கள் வடபகுதியெங்கும் தமது சூறாவளிச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன், இலங்கையின் வடபகுதிக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்கிற செய்தி பரவியவுடன், மிக அவசர கதியில் சீனாவின் தூதுவர் வடபகுதி நோக்கி தனது பரிவாரங் களுடன் களமிறங்கினார். அவர் மன்னார், யாழ்ப்பாணத் தீவுப் பகுதி, யாழ் மத்தி, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு தனது பயணத்தை மேற்கொண்டார். இப்பயணங்களின் போது மக்களுக்கு நிவாரணப் பொதிகளையும் வழங்கியுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணத்தின் பழைய கச்சேரித் தொகுதி, மந்திரிமனை, பருத்தித்துறை கடற்கரைப்பகுதி போன்றவற்றில் தனது பார்வையைச் செலுத்தியுள்ளார். பருத்தித்துறைக் கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி அதனூடாக இந்தியாவைக் கண்காணிக்க முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அவரது சுற்றுப்பயணத்தில் பெரும்பாலும் கடற்கரையை மையப்படுத்தியே பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் நிவாரணப் பொதிகளையும் அவர் வழங்கி தமிழர்கள் மீது தனது அன்பைக் காட்டியுள்ளார். அதேபோல இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்கள் யாழ் நகருக்கு விஜயம் மேற்கொண்டு பல இடங்களுக்கும் சென்று மக்களையும் சந்தித்து மீண்டும் இந்தியா சென்றுள்ளார். இவ்விரு நாட்டுத் தூதர்களும் வடபகுதியின் மீது மையங்கொள்ள மிகப்பெரும் அரசியற் காரணங்கள் உள்ளன. இவ்விருவரின் பயணங்களுக்குப் பின்னால் சிங்கள அரசின் கபட நாடகம் தெட்டத்தெளிவாகப்புரிகிறது. தமிழர்கள் இவ்வாறு வரும் தூதர்களிடம் நிவாரணப் பொதிகளைப் பெற்றுக்கொண்டு தமது அரசியல் இலக்கை விட்டு விலகிப்போவார்கள். இதனைப் பயன்படுத்தி தனது அரசியல் நலன் சார் திட்டங்களை வடபகுதியில் நிறைவேற்ற கணக்குப்பண்ணியுள்ளது. யாழ் மண்ணில் சீனர்கள் – இந்தியர்களின் திட்டங்கள் எதுவும் பலித்துவிடப்போவதில்லை என அங்குள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள் சீனத் தூதுவரிடம் கேட்ட கேள்விகள் சான்று பகர்கின்றன.

இருந்தபோதிலும் தமிழர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டிய காலமிது. நிவாரணப் பொதிகளுக்கு மயங்கி எமது பாரம்பரிய இருப்பிடங்களை இழக்கக்கூடாது. சிங்கள அரசின் கபட நாடகத்திற்கு இரையாகக் கூடாது. எவ்வல்லரசு வந்தாலும் வடகிழக்கின் வளங்களை கொள்ளையிட அனுமதிக்க முடியாது என்பதை சிங்கள அரசுக்குப் புரியவைப்போம்.

# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்



சில பூக்கள் பகலில் தொடர்ச்சியாக பேருந்தில் பயணிப்பது, மொட்டுக்களுக்கு உணவு கொடுப்பதற்காக தங்களின் தேனை வீதிகளிலும் விடுதிகளிலும் விற்பதற்காக என்பதை எத்தனை நபர்கள் அறிவார்கள் வழமையானவர்களை விட.

வாய் இல்லாத பூக்களின் தேனை எத்தனையோ தமிழ்மொழி தெரியாத வண்டுக்கள் செந்நெல்லின் சோறையும் பசு நெய் கலந்து சமைத்த கத்தரிக்காய்க் கறியையும் சுவைப்பது போல சுவைத்துவிட்டு பூக்களை இதழ்கள் இல்லாமல் காம்புகளுடன் மட்டும் குற்றுயிர்களாக பரிதவிக்க விட்டுள்ளன.

"அவர் அப்படிதான். நீங்கள் இருங்க." முன் பலகணி ஓரத்து ஆசனத்திலிருந்து பின் பக்கம் திரும்பியிருந்த கம்பி மீசை இளைஞனிடமிருந்து சிரித்த முகத்துடன், ஒலி வீசியது.

சாத் மெதுவாக தனது பையை பேருந்தின் மேல் கம்பி தட்டில் வைத்து விட்டு. வயிறு பசிக்கவே மெதுவாக 'அப்பிளை' பையிலிருந்து எடுத்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தான்.

"எங்க போறீங்க தம்பி? - மீண்டும் கருத்த குண்டன் கேள்விக் கணையைத் தொடுத்தான்.

'இவன் ஒரு மாதிரியாவன். இவனோடு கவனமாகத்தான் இருக்க வேண்டும்.' - மனத்துக்குள் எண்ணியவாறு, "கெம்பஸ்சுக்குப் போறன்." என்றான்.
இவ்வளவு நேரமும் சாத்தின் தேற்றத்தையும் உடல் அமைப்பையும் மட்டுமே கணக்கில் கொண்டுகதைத்த கருத்த குண்டனின் பேச்சில் சற்று நெகிழ்ச்சித் தன்மை தோன்றியது.
"என்ன பாடம்?"
"விஞ்ஞானப் பாடம்"
"பையோ சையன்ஸ் கிடைச்சிருக்கா"
"இல்லை மெடிசின்" - 'அப்பிளை' மெதுவாக கடித்து, வெறுமையாக இருந்த வயிற்றுக்குத் தீன் போட்டான்.

அழுக்குப் படிந்த உடை, வியர்வை நாற்றம், களைத்து சோர்வடைந்த உள்ளம், கிழிந்த பயணப்பை, தேய்ந்து போன ஒரு சோடி பாட்டா, பரட்டைத் தலை, மாறு கண் பலூன் நீளக் காற்சட்டை இவற்றைப் பார்த்துச் சாதாரணமாக சிந்தித்த கருத்த குண்டனின் சிந்தனையை, சாத்தின் படிப்பும் "நீங்களும் 'அப்பிள்' சாப்பிடுறீங்களா" - தேன் கனிந்த வார்த்தைகளும் அடியோடு கருவறுத்தது.

"தம்பி வன்னியிலிருந்து பெரிய கஸ்டப்பட்டு வாறீங்க போல"
"ஓம் அண்ணன். உங்கட பெயர் என்ன?"
"என்ர பெயர் தம்பி, யூஜீன்"

21

"உங்கட பெயர் என்ன தம்பி?" என்ற குளிச்சியான வார்த்தையை சாத் அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. இருந்தும் யூஜீன் முகத்தில் சிறிது சிரிப்பும் உதவும் ஒளியும் மலர்ச்சியும் தோன்றின.
"சாத்"
"என்ர பெயரை விட 'சோட்' பெயர்"
"அப்பா வைச்ச பெயர்"
"அப்பிடியா?'
"யூஜீன் அண்ணன் எங்க பேறீங்க?"
"தம்பி சாத் என்ர ஊரே 'ரீங்கோதான்' வெளிநாட்டுக்குப் போவம் என்று நானும் தம்பியும் 'ஏஜன்சி'யை வவுனியாவில் சந்திச்சுட்டு, வீட்ட போறம்"
"ரீங்கோவில் எங்க?"
"நீங்க இப்ப போற இடத்துக்குப் பக்கத்திலைதான் வில்லூண்டி கந்தசாமி கோவிலுக்கு முன் வீடு"
"கப்பல் 'டிக்கட்' எடுக்க கன நாள் நிக்க வேண்டி வருமா அண்ணன்?"
"எல்லா இடத்திலையும் பக்கச்சார்பு இருக்குதுதான். நீங்க படிக்கப் போறதால், ஒரு கிழமைக்குள்ள எடுக்கலாம்"
"அண்ணன் உடனே பேக முடியாதா?"
"நல்ல பகிடிதான். 'டிக்கட் புக்' பண்ணவே குறைஞ்சது இரண்டு நாள் எடுக்கம். ஜனாதிபதி போல, நீங்கள் உடனே போகப்போறீங்களா?" - ஹாஸ்யமாக கூறி, சிரித்தார், யூஜீன்.
"தங்குறது என்றால், தங்குறதுக்கு அரசாங்கத்தால் இடம் தருவாங்களா?"
"ஓம் தம்பி உங்களுக்கு 'ஏசி' போட்ட 'ரூம்' தருவாங்க போய் பாருங்க" - ஏளனமாக சிரித்தார்
"ஏன் அண்ணன்? இப்படி சொல்லி, சிரிக்கிறீங்க"
"அப்ப என்னை என்ன செய்ய சொல்லுறீங்க?"
"தங்க இடம் தறமாட்டாங்களா?"
"இல்லை"
"அப்ப போற ஆக்கள் எங்க தங்குறது?'
"'லொட்சி' இருக்கு 'ரூம்' எடுத்து தங்க வேண்டியதுதானே"
"அதுக்கு காசா?"
"பிறகு என்ன சும்மாவா?. ஒரு நாளுக்கு ஓராளுக்கு 250 ரூபாய். 'நோமல் ரூம்' 'ஏசி ரூம்' 500 ரூபாய். பொது மண்டபத்திற்கு 150 ரூபாய்"
"இவற்றோட குறைய இல்லையா?"
"றோட்டு கரை இருக்கு அங்க சும்மா இருக்கலாம். அதுவும் பொலிஷ்காரன் வந்து குண்டு வைக்க வந்தனீ என்று பிடிக்கக்கொண்டு போவான். பிறகு அங்க இருந்து வெளியில் வர ஒரு வருஷம் போகும். இல்லாட்டி பல பேரைப் போல நீங்களும் பிணமாக வீதியில் அநாதையாக கிடக்க வேண்டி வரும்."

"ஐயையோ, இந்த சோலி வேண்டாம். காசு போனாலும் பரவாயில்லை நான் பொது மண்டபத்திலையே தங்குவம்" - '150 ரூபாய் படி பத்து நாளைக்கு 1500 ரூபாய். 20 நாளுக்கு 3000 ரூபாய். அதில 'டிக்கட்' செலவு வேற. யாழ்ப்பாணத்துககுப் போன ஒரு செலவு இருக்குது' என தனக்குள் சிந்தித்தப்படி தன்னை மறந்து, சாத் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான்.

"சாத் என்ன முகமெல்லாம் கறுத்துப் போச்சு, என்ன அப்படி யோசனை?" - சாத்தின் முதுகில் யூஜீன் தட்டியதும் நித்திரையில் கிடந்தவன் திடுக்கிட்டு எழுவது போல, துண்டலுக்கு துலங்களைக் காட்டினான்.

"இல்லை, யூஜீன் அண்ணன் இவ்வளவு பணத்துக்கு எங்க போறது என்றுதான் யோசிக்கிறன?"
"படிக்க வெளிக்கிட்டா அப்படித்தான்"
"ஏழைகள் படிக்க முடியாதா?"
"முடியும்"
"எப்படி?"
"சவால்களை எதிர்கொண்டு"
"எவ்வளவுதான், சவால்களை எதிர் கொள்றது அண்ணன்?. எங்கட சமூகம், ஆயுதம் யுத்த முதல் பொருளாதார யுத்தம் வரை, உடமை இழப்பு முதல் உயிர் இழப்ப வரை கல்லின் மேலிட்ட கலம் போல நாளுக்கு நாள் உடைஞ்சுக்கொண்டே வருது"

"நல்ல பழமொழியெல்லாம் கதைக்கிறீங்க. அது தம்பி எங்கட சமூகத்திற்கு அன்று தொடங்கி இன்று வரை எங்க தம்பி ஒற்றுமையாக இருந்தது."

"அம்மா சின்ன வயசில் சொல்லித் தந்தது இப்ப பயன்படுது. அவங்க ஒற்றுமை இல்லாததால், ஒன்றும் அறியாத நாங்களும் சேர்ந்து அல்லவா பாதிப்படைகின்றம்"

"அதுக்கு என்ன செய்யிறது? அனுபவிச்சித்தான் ஆக வேண்டும். உலகத்தில் வீர இனம் என்றும் பண்பாட்டில் சிறந்த பண்பாடு என்றும் வார்த்தைக்கு வார்த்தை பேசிக்கொண்டல்லவா திரியிரம்."
"நீங்கள் சொல்றதும் சரிதான்"
"உங்கட அம்மா, அப்பா, உறவுகள் எல்லாம் எங்க இருக்காங்க" என்று யூஜீன் உரையாடிக் கொண்டிருந்தவாறு திடீரென்று சாத்திடம் கேள்விக் கணையைத் தொடுக்கும் போது, சாத் பேருந்தின் சாளரத்தின் ஊடாக மெதுவாக வந்த காற்று மேனியில் பட, கண் அயர்ந்து கொண்டு போனான் திடுக்கிட்டு கண்களைச் சிமிட்டினான்.
"அப்பாவும் தங்கசியும் மாங்குளத்திலை இருக்கீனம்"
"அம்மா இல்லையா?"
"கிளாலி கடற்கரையில் வைத்து அம்மா காணாம போயிட்டா. அப்ப நானும் சின்ன பொடியன். தங்கச்சியும் சின்ன ஆள். அப்பா இன்று வரை அம்மாவை தேடாத இடமில்லை ஒரு தகவலும் இல்லை..." - கண்ணீர் மல்க கூறினான்.
'அட இது பெரிய பிரச்சினையா போச்சி?. அவண்ட சோகத்தைக் கிண்டி விட்டாச்சு பாவம்' - சிந்தித்தவாறு யூஜீன், சாத்திடம் பேச்சைம மாற்றி பேசினான்.
"தங்கச்சி என்ன செய்யிறா?"
நீண்ட நேரத்திற்குப் பின்னர், "அவள் 'எயல்' எழுதிட்டு 'கொலிச்சு'க்குப் 'போம்' போட்டிட்டிருக்கா? என்று சாத் பதிலளித்தான்.
"அப்பா என்ன செய்யிராரு?."
"குத்தகைக் காணியைப் பாத்துக்கொண்டு வீட்டோட இருக்காரு"
"இப்ப வருமானம்?"
"அப்படி, இப்படிதான். அதுதான் முதலில் 150 ரூபாயை விடவும் குறைஞ்ச வாடகைக்கு 'ரூம்' கேட்டனான். நீங்கள் அங்கத்தைய நிலைமையைச் சொன்னதும் எனக்கிட்ட இருக்கிற காசை வைச்சு சமாளிக்கிறது என்று தீர்மானித்துப் போட்டன்."

பேருந்து, ஹொரவபொத்தனை ஆள் நடமாற்றம் அற்ற கிடங்கும் பள்ளமுமாகவுள்ள வீதியில் புழுதியைக் கிளப்பியவாறு பாய்ந்து பாய்ந்து செல்கின்றது. நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேவையற்ற உள்நாட்டு யுத்தத்தினால், திருக்கோணமலைக்கும் வவுனியாவுக்கும் உரிய நேரிய வீதி மூடப்பட்டமையால், இவ் வீதியால் பொது மக்கள் பயணிக்க வேண்டிய நிலை. இந்த வீதியைக் காட்டு வீதி என்றும் அழைப்பார்கள் ஏனென்றால், அவ்வளவுக்கு பெரிய அடர்ந்த காட்டின் ஊடாக அந்த வீதி ஊடறுத்துச் செல்கின்றது. வீதியின் இரு மருங்கிலும் மனிதரால், சாதாரணமாக கட்டியணைக்க முடியாத அளவுக்கு பருத்த பாலை, முதிரை, வீரை, வெடுக்குநாறி, சடவக்கை...

**தொடரும்...**

# தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டம் தொடர்பில் அரச இயந்திரங்களின் இன்றைய நிலை



1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த நாடாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 2023 வரையிலான நடைமுறை அரசியலை எடுத்துக்கொண்டால், சிங்கள பௌத்த பேரினவாதிகளுடைய நிகழ்ச்சிநிரலுக்கு ஒப்பாகவே செயற்பாடுகள் அமைந்துள்ளது. குறிப்பாக பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவே மாறி மாறி வந்த அரசுகள் அனைத்தும் பௌத்த பேரினவாதிகளை பயன்படுத்தி வந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக மகாநாயக்க தேரர்கள் மகாவம்சத்தை திருத்தி எழுதிய விவகாரமானது துட்டகைமுனுதான் இந்த நாட்டிற்குச் சொந்தக்காரன் என்கின்ற பாணியில் செல்கின்றது. ஆனால் விஜயனும் அவனது தோழர்களும் இராமேஸ்வரத்தில் இருந்து மன்னாரில் வந்திறங்கிய காலத்திலிருந்தே பௌத்தம் இங்கே ஆரம்பிக்கபட்டது என்பது வரலாறு. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் பௌத்த இந்து அல்ல, இந்து பௌத்தமே இந்த நாட்டில் மேலோங்கியிருந்தது. இராஜராஜசோழன் காலத்து வரலாற்றுகளை படித்துப் பார்த்தால் இந்த நாடு யாருக்குச் சொந்தம் என்பதும் புலப்படும். அதுமட்டுமன்றி குமரிக்கண்டம் என்ற ஒன்று எப்படி இல்லாமல் போனது, அது கடலில் எவ்வாறு மூழ்கியது என்கிற வரலாறும் இருக்கிறது.

குறிப்பாக, இலங்கைக்கும் இந்தியாவிற்குமான தரைவழிப் பாதை இராமர் பாலம் என்பது தற்போது வரை கடலடியில் புதைந்தே கிடக்கிறது. இதுவொரு வரலாற்றுச் சுருக்கம். தற்போதைய நடைமுறை அரசியலை எடுத்துக்கொண்டால் நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 30 வருட காலப் போராட்டத்தில் உத்தியோகபூர்வமாக 14 உள்ளூர் பேச்சுக்களும், 07 சர்வதேச பேச்சுக்களும் நடந்து முடிந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்காலநிர்வாகமாக வடக்கு கிழக்கில் ஒரு நிழல் அரசியலைச் செய்து வந்தனர். அக்காலகட்டத்தில் தான் உலக நாடுகளில் உள்ள ஊடகவியலாளர்கள் அனைவரும் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனது ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர். அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளில் மிக முக்கியமாக, "விடுதலைப்புலிகள் ஆகிய உங்களை பயங்கரவாத அமைப்பென்று அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் இணைந்து முத்திரை குத்தியதை எப்படிப் பார்க்கிறீர்கள்?"

இதற்குப் பதிலளித்த பிரபாகரன், "ஒரு இனவிடுதலைக்காகப் போராடிய போராளிகளை ஒவ்வொரு நாடுகளும் பாசிச பயங்கரவாதிகள் என்று கூறுவது வழமை. நாம் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை எமது தமிழினம் பெற்றுக்கொள்ள வேண்டும். எமக்கான ஒரு தனி அலகு வேண்டும் என்ற நோக்கத்தோடு போராடுகின்றோம். சிங்கள மக்களுக்கு நாம் எதிரிகள் அல்ல. சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அதே உரிமைகளையும் தான் கேட்டு நிற்கின்றோமே தவிர வேறொன்றுமில்லை.

மற்றொரு கேள்வியாக, "இன்டர்போல் உங்களைக் கைது செய்யும் எனக் கூறுகின்றார்களே?" அதற்குப் பதிலளித்த பிரபாகரன், நடைமுறைக்குச் சாத்தியமான கேள்விகளைக் கேளுங்கள் எனச் சிரித்தார்.

இந்த ஊடக சந்திப்பின் அடுத்த எதிரொலியாக விடுதலைப்புலிகள் தனிநாடு கோருகின்றார்கள் என்ற பிரச்சாரம் மேற்குலகிற்கு கூறப்பட்டு விடுதலைப்புலிகள் பலம் பொருந்தியவர்களாக வந்துவிட்டால் அது இந்திய நாட்டிற்கு ஆபத்தானதொன்றாக முடியும். அதுமட்டுமன்றி ஆசிய - பசுபிக் நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றம் நெருக்கடிகளைத் தோற்று விக்கும் என்ற காரணத்தினால் பயங்கரவாதத் தடைச்சட்டம் விடுதலைப்புலிகளை மழுங்கடிக்கப் பயன்படுத்தப்பட்டது.

34 நாடுகளின் உதவியுடன் இஸ்ரேல், இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் இப்போரை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டார்கள். அதில் ஒரு கட்டமாகவே 2009ஆம் ஆண்டு மே 18 அன்று போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாகவும் இலங்கை அரசு அறிவித்தது. விடுதலைப்புலிகளின் போராட்டம் தான் தமிழ் மக்களின் தீர்வுத்திட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது இல்லாதுவிடின் அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டத்தை வடகிழக்கில் அமுல்படுத்த முடியும் என கூறிய இலங்கை அரசு, யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகளைக் கடந்துள்ளபோதிலும் தமிழ் மக்களுக்கான வடகிழக்கு இணைந்த அசியல் தீர்வை இன்னமும் வழங்காமல் இருப்பதும், வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை இணைக்காது பிரித்தாளும் தந்திரத்தை மேற்கொண்டு இருப்பதும், தமிழ் மக்களுக்கான ஒரு தனி அலகோ அல்லது அவர்களுக்கான தீர்வுத்திட்டமோ வழங்குவதில்லை என்கிற நிலைப்பாட்டில் அரசு இருக்கிறது.

அதனொரு கட்டமாகவே 1000 பௌத்த விகாரைகளை தமிழர் பிரதேசங்களில் நிறுவுவது என்றும் வடகிழக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சி என்கிற பெயரில் இனங்காணப்பட்டு அது பௌத்தத்திற்கு சொந்தமான இடங்கள் எனக்கூறி, குருந்தூர் மலை, தையிட்டி, வெடுக்குநாறி, நீராவியடிப் பிள்ளையார் போன்ற தமிழர் வழிபட்டு வந்த பாரம்பரிய ஆலயங்களை தனது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

சட்டத்தை மீறி பௌத்த விகாரைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இறுதியாக குருந்தூர் மலை, தையிட்டி விகாரைகள் இரண்டும் கட்டக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் பயன் எதுவும் இல்லை. இன்று இவ்விரு விகாரைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து மதவாத அரசியலை அவர்கள் நேரடியாகவே மேற்கொள்கின்றனர். குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிபதி ரி.சரவணராஜா மிரட்டப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறினார். இதன் பின்னணியைப் பார்க்கின்றபோது, பௌத்த பேரின வாதிகளுக்கு எதிராக நீதிபதிகள் கூட தீர்ப்பினை மாற்றிச் சொல்லவேண்டும். அவ்வாறு கூறாவிட்டால் நீதிபதிகளுக்கும் இதே நிலைமை தான் என்பதை இச்செய்தி எடுத்துக்காட்டுகிறது. ஒரு நாட்டின் நீதி இவ்வாறிருக்கின்றபோது தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்பதும், இனப்படுகொலைக்கான நீதி என்பதும் எவ்வாறு அமையப்போகின்றது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கிளஸ்டர் குண்டுகள் பாவிக்கப்பட்டன. இன்று காசா - இஸ்ரேல் யுத்தத்தில் மருத்துவமனைகள் தாக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான சிறுவர்கள், வயோதிபர்கள் கொல்லப்பட்டதாக சர்வதேசம் சுட்டிக்காட்டுகின்றது. ஐ.நா சபை கண்டனம் தெரிவிக்கின்றது. அரபு லீக்கில் இணைந்துள்ள 22 நாடுகளும் மொத்தமாக 47 நாடுகள் இஸ்ரேல் போரை நிறுத்தவேண்டும் என்றும் காசா மக்களுக்கான இனப்படுகொலை நிகழ்த்தப்படுகின்றது என்றும் கூறி அவசரமான மாநாட்டைக் கூட்டிக் கலந்துரையாடுகின்றனர். ஆனாலும் ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்பினை கூண்டோடு அழித்தே போரை நிறுத்துவோம் என்கிறது இஸ்ரேல்.

இலங்கைப் போரில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் கொலை செய்யப்பட்ட நிலையிலும், கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு மருத்துவமனைகள், சென்பீற்றர்ஸ் தேவாலயம் போன்றன கிபிர் விமானங்களால் குண்டு வீசி அப்பாவிப் பொதுமக்கள் இறந்து போனார்கள். இந்த ஈனத்தனமான செயலை இலங்கை அரசு சர்வதேச நாடுகளின் உதவியுடன் தான் செய்தது. இன்று காசாவில் இஸ்ரேல் ஒரு இனப்படுகொலையினை மேற்கொள்கின்றது என குரல் எழுப்பும் முஸ்லீம் தரப்பினர் அல்லது உலக நாடுகள் இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பில் குரல் எழுப்பாமல் போனது ஏன்?

இஸ்ரேல் - காசா பிரச்சினை என்பது அண்ணன் தம்பிக்குள் இடம்பெறுகிற பிரச்சினையே. கிறிஸ்தவ வேதாகமம் குறிப்பிட்டதைப்போன்று ஆபிரகாம் இரு புதல்வர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது என்பதேயாகும். ஜெருசலேம் தேவாலயத்திற்கான பிரச்சினையே அது. யூதர்கள் பலஸ்தீனத்திலும் வாழ்கின்றார்கள். ஆகவே முதலாளித்துவ நாடுகள் தமது ஆயுதப் பலப்பரீட்சையினை தற்பொழுது காண்பித்து வருகின்றார்கள்.

ஆயுத நவீன வளர்ச்சிகளில் ஒன்றான அயன் டோம் எதிர்ப்பு கருவிகளும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சந்தையில் அயன் டோம் பாரிய வெற்றியினையும் கண்டுள்ளது. ஈழப்போர் என்பது ஒரு வகையில் இஸ்ரேல் - காசா பிரச்சினைகளில் ஒன்றாக எடுத்துக்கொண்டால், தற்போது நாடெங்கிலும் சிதறடிக்கப்பட்டிருக்கின்ற தமிழினம் ஒன்றிணைந்து தமிழினத்திற்கான ஒரு தாயகத்தை உருவாக்கும் நிலை தற்பொழுது கேள்வியாக எழுந்துள்ளது. வேலைக்காக சென்ற யூதர்கள் தமது நாட்டில் யுத்தம் இடம்பெறுகிறது என்ற காரணத்தினால் மேற்குலகில் தங்கியிருந்த ஒரு இலட்சம் இராணுவ வீரர்கள் மீள் அழைக்கப்பட்டுள்ளனர். 3 இலட்சம் படைவீரர்கள் போர்க்களத்தில் உள்ளார்கள். அதிநவீன தொழில்நுட்பம் கொண்டே நாடுகளைத் தாக்குகின்ற திறன் இருக்கின்றது. குறிப்பாக உலகத்தில் தமிழர்களுக்கு என்று நாடு இல்லை. ஆனால் தமிழ் மொழி தொன்மையானது.

சிந்துவெளி நாகரீகத்தினை எடுத்துக்கொண்டால் ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்றவை பண்டைய தமிழர் பாரம்பரியங்களைக் காட்டுகின்றது. ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை சிறப்பைக் கொண்டதுதான் எமது தமிழர் பூர்வீக நிலங்கள். தமிழர் உரிமைக்காகப் போராடிய விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் இந்த நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளார்கள். தமிழினத்திற்காக இறுதிவரை போராடிய புலிகள் அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் நாடு கடந்த தமிழீழமாக இருக்கக்கூய விடுதலைப்புலிகள், எமக்கான ஒரு நாடு வேண்டும் என்பது பற்றி சிந்திப்பது இக்கால அரசியலுக்கு உசிதமானது. இல்லையேல் 1948இலிருந்து இன்றுவரை சிங்களப் பேரினவாத அரசியல் நீரோட்டத்திலிருந்து மாற்றம் ஏற்படப்போவதில்லை என்பதே இன்றைய நிதர்சனமான உண்மை.

**நெற்றிப்பொறியன்**

Courtesy: கொல்லங்கலட்டியான்

# தடம் மாறும் அரசியல் தலைமைகளின் மத்தியில் மாமனிதர் நடராஜா ரவிராஜின் நினைவுகள்

தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் தவிர்க்க முடியாத ஆளுமையாக இருந்த மாமனிதர் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் அவர்களின் நினைவுக்குரிய நாளாக ஒவ்வொரு நவம்பர் 10ந் திகதியும் கொள்ளப்படுகிறது. மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணமும், அவரது கொள்கைகளும் இன்றைய தலைவர்களுக்கு காலத்தால் அழியாத கலங்கரை விளக்காக விளங்குகின்றன.

நேர்மையும், தைரியமும், மக்களின் அபிலாஷைகளை அடைவதற்காக அவர் கொண்டிருந்த இதயபூர்வமான அர்ப்பணிப்பும், எவரையும் மதிக்கும் சுபாவமும், தனது உறுதியான கருத்துக்களை பொது வெளியில் வெளியிடும்போது அவர் பேணும் அரசியல் நாகரிகமும், அரசியல் களத்தில் வேறுபடுத்தி இனம் காண்பிக்கும் ஆளுமைமிக்க தலைவராக அவரை மாற்றியிருந்தன.

இந்த சூழலில் அவரோடு இணைந்து தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் பயணித்த மூத்த கட்சி உறுப்பினர்களில், மாவை சேனாதிராசா, குலநாயகம், சம்பந்தன், கனகசபாபதி போன்ற சிலரே, தமிழரசுக் கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளர்களாக திகழ்கிறார்கள்.

### கட்டுமரமாக செயற்பட்ட தமிழரசுக் கட்சி

ஏனைய மூத்த செயற் பாட்டாளர்கள் பலர் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஐக்கியமாகிவிட்டார்கள்.

இன்றுள்ள பலர் பழைய வீட்டில், புதிய குடியிருப்பாளர்களாக, குடியமர்ந்துள்ளார்கள். இந்த நிலையில், பழைய வீடாகிய தமிழரசுக்கட்சியின் கொள்கை கோட்பாடுகளில் பல்வேறு தளம்பல்கள் ஏற்பட்டுள்ளன.

கட்சி என்பது, தான் சார்ந்த மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். ஆனால் அவை தடம்மாறி, பதவிகளைப் பெறுவதற்கான ஒரு கட்டுமரமாகவே இக்கட்சி பயன்படுத்தப்படுகிறது.

இக்கட்சியின் கொள்கை களுக்காக பல்வேறு பொதுமக்கள், தலைவர்கள் தமது உயிரை ஆகுதியாக கொடுத்தார்கள். பல்வேறுபட்டவர்களின் தியாகத்தால் உருவாக்கப்பட்ட, இந்தக் கட்சி இன்று வழிமாறிப் பயணிக்கிறது.

குறிப்பாக கட்சியின் மத்திய குழுவில் அங்கத்துவம் பெறும் பலர் சுய பிரஞ்ஞை அற்றவர்களாக, தனிநபர் துதிபாடிகளாகவும், தமது பதவி நலம் கருதிக் கூசா தூக்குபவர்களாகவுமே இருக் கிறார்கள். பல்வேறு தொண்டர்களின் அர்ப்பணிப்பை, துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

தற்போது கட்சித் தலைமைக்கான போட்டி பல்வேறு தளங்களில் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

தமிழினத்தின் ஒரு சாபக்கேடு இந்நிலையில் மாமனிதர் இரவிராஜ் அவர்களின் வாழ்வியல் பற்றிய மீள்பார்வை அவசியமாகிறது.

கூட்டமைப்பை கட்சிகளாக பிளந்து, தமிழரசு கட்சியை அணிகளாக உடைத்து, தமிழர் எதிர்காலத்தை சிதைத்து நானே அக்கட்சியின் தலைவர் இந்த கோதாவில் வலம் வந்து கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழினத்தின் ஒரு சாபக்கேடு.

தமிழரசுக்கட்சியின் குறித்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கட்சித்தலைவராக வருவதற்காக நீண்டகால நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்தி வந்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களாக, தனது அணிக்குச் சார்ந்தவர்களை உள்ளீர்த்துக்கொண்டார். எதிரிக்கு எதிரி நண்பர் என தனக்கான ஆதரவுத்தளத்தை பெருக்கினார்.

மாவட்டக்கிளைகளூடாக குறிப்பாக, பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேரி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை என தனது ஆதரவுத்தளத்தை, சட்ட உதவி என்னும் பெயரில் பெருக்கினார்.

ஆயினும் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை அவரால் வீழ்த்த முடியவில்லை. தான் கட்சித் தலைமையைப் பெறுவதற்குரிய அனைத்து, ஏற்பாடுகளையும் செய்துமுடித்துவிட்டு, பதவிக்காக காத்திருக்கிறார்.

இவர் கட்சித்தலைவராக வந்தால், தமிழ்மக்களின் கட்சிக்கான வாக்கு வங்கி, பெருமளவில் சரியும்.

22 நாடளுமன்ற உறுப்பினரோடு அங்குராப்பணமான தமிழ்தேசியக் கூட்டமைப்பு எப்படி இன்று 11 நாடளுமன்ற உறுப்பினராக இவரால் வந்ததோ, அதுபோன்ற இழிநிலை தமிழரசுக்கட்சிக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாத விடயமாகிவிடும்.

மரத்தில் இருந்து தவறிவிழும் கனிகள் தமது கூடைகளுக்குள் விழவேண்டும் என தமிழ்த் தேசியமக்கள் முன்னனி போன்ற கட்சிகள் காய்நகர்த்த தொடங்கிவிட்டன.

தமிழரசுக்கட்சியின் அடுத்த தலைவர் இந்நிலையில் தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவியில் சுமந்திரன் வெற்றிபெறுவது உறுதியானால், 1960 களில் தமிழ்நாட்டில் தி. மு. க தலைவர் அண்ணாத்துரை சொன்ன வாக்கியம் தான் நினைவுக்கு வருகிறது.



ஆட்சியில் வென்றுவிட்டோம் கட்சியில் தோற்றுவிட்டோம் என்ற நிலைபோல, தமிழரசுக்கட்சியின் தலைமையை சுமந்திரன் அணி கைப்பற்றி அக்கட்சி மக்கள் ஆதரவுத்தளத்தை இழந்து தோற்றுவிடும் நிலைதான் ஏற்படப்போகிறது.

அது மாத்திரமன்றி தமிழரசுக் கட்சி தனது நோக்கத்திலிருந்து பிறழ்வுபட்டு வேறொருதிசையிலேயே பயணப்பட ஆரம்பிக்கும் கட்சியினுடைய பதவிக்காக போட்டியிடும் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் யாருமே ரவிராஜின் இடத்தை பெறமுடியாதவர்கள் அல்லது ரவிராஜின் உச்சத்தை தொட முடியாதவர்கள்.

எந்த சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் விலைபோகக் கூடியவர்கள் என்பது பெரும்பாலான மக்கள் மனதில் பதிந்திருக்கும் எண்ணம். ஆனாலும் யாரோ ஒருவரை தேர்ந்தெடுக்கவேண்டிய நிலைக்குள் கட்சி தள்ளப்பட்டு இருக்கிறது.

ஒரு இளம் துடிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினராக தனக்கு வாக்களித்த மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு இன ஒற்றுமையை மனதில் கொண்டு போராடிய ஒரு தலைவரே மாமனிதர் ரவிராஜ்.

தனது மக்களின் விடிவிற்காக தனது உயிரையே கொடுக்க தயாராக இருந்த ஒருதலைவர் மத்தியில் இன்று தங்களுடைய பணப்பெட்டிகளையும் வாக்கு வங்கிகளையும் நிரப்பும் நோக்கில் செயற்படும் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணத்திலிருந்து பெறவேண்டிய பெறுமதியான படிப்பினைகளை உள்வாங்குவதில் தவறிவிட்டார்கள்.

கஜேந்திரகுமார் வெளியேற்றம் முதல் கடந்த வருடம் இடம்பெற்ற அதிபர் தெரிவு வரை தமிழரசுக் கட்சியின் தலைவர்களின் முடிவுகளும் அவர்களின் நடத்தைக் கோலங்களும் சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது என்பது போல அரசியல் முதிர்ச்சி யற்றவையாகவே இருக்கின்றன.

### தமிழரசுக் கட்சி கற்றுக்கொள்ள வேண்டியது

மாகாண சபையை செயற்படவிடாது தடுத்ததில் தமிழரசுக் கட்சி தலைமைக்கு முக்கிய வகிபாகம் உண்டு. அதைத்தொடர்ந்து பல சந்தர்ப் பங்களில் கூட்டமைப்பை சிதைக் கும் நடவடிக்கையை ஒருவர் முன்னெடுக்க அதைக்கண்டும் வாழாவிருந்த தலைவர்களே இன்று தமிழரசுக் கட்சி தலைமைக்காக போட்டியிடுகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழர் எதிர்காலத்திலும் அவர்கள் அபிலாஷையிலும் அக்கறை கொண்ட ஒரு தலைவனாக இதய சுத்தியுடைய ஒரு அரசியல் ஆளுமையாக புடமிடப்பட்டிருந்த மாமனிதர் ரவிராஜ் அவர்களின் வாழ்க்கையிலிருந்து, தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

தமிழர் தேசிய மன உணர்வை சிதைத்து, கலாச்சார விழுமியங்களை மழுங்கடித்து மென்வலு எனும் தீர்க்கதரிசனமற்ற சொல்லாடல் மூலம் தமது செல்வாக்கை மக்கள் மத்தியில் தக்கவைத்துக்கொள்ள முடியும் என நினைத்த தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆசனம் ஒன்றைப் பெறுவதற்காக, தேர்தல் முறைகேடுகள் வரை செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவானது.

### சரியான தலைமை

மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோஎந்ததமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவரிடமோ நாம் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆயினும் மக்களின் நலன் சார்ந்தும் தமிழ் மக்களின் ஒற்றுமை சார்ந்தும் அவர்கள் செயற்பட வேண்டும். சரியான ஓர் தலைமை தெரிவு செய்யப்படாத பட்சத்தில் தமிழரசுக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடையும்.

நாடாளுமன்ற ஆசனத்தை பெறுவதற்காக மீண்டும் ஒரு தடவை தேர்தல் முறைகேடுகள் வரை பயணப்படவேண்டியிருக்கும்.

# தமிழின விடுதலைக்காகத் தம்மை ஈந்து எமது மண்ணில் விதையாகிப்போன மாவீரர்கள்

தமிழீழ மக்களின் இறைமையை மீட்டெடுத்து. தமிழீழத்தேச அரசமைக்கும் புரட்சிகர வரலாற்றுப் பயணத்திற்காக. விடுதலைக் கனவுடன் தமது இன்னுயிரை ஈகம்செய்தமாவீரத்தெய்வங்களைவணங்கி. நினைவுகூர்ந்து. அவர்கள் கனவு நனவாக நாம் உறுதியுடன் போராடியே தீருவோமென உறுதிகொள்ளும் புரட்சிகரநாள். "மாவீரர் நாள்". தமிழின விடுதலைக்காகத் தம்மை ஈந்து எமது மண்ணில் விதையாகிப்போன மாவீரர்களின் ஈகத்தினை ஒவ்வொருவரது நெஞ்சத்திலும் நிறுத்தி. தமிழ்த்தேசியம் என்ற உயிர்மைக் கருத்தியலினை எமது வாழ்வியல் நெறியாகவும் அரசியல் வழியாகவும் கொண்டு. தமிழீழத் தனியரசமைக்கும் விடுதலைப் பயணத்தில். உறுதியுடன் போராடுவோம் என எழுச்சிகொள்ளும் தமிழீழத்தேசிய நாள்.

தமது இறுதிமூச்சு வரை தமிழின விடுதலைக்காகத் தம்மை ஒறுத்துப் போராடி. ஒப்பற்ற ஈகங்களைச் செய்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இந்நாளில் என் குடும்பம். என் உடைமை. என் வளங்கள். என் நலன்கள். என் வளர்ச்சியென சிந்தையில் குறுகிக் கிடக்காமல். எமது மக்கள். எமது மண். எமது விடுதலை என்று தமிழர்கள் ஒவ்வொருவரும் எண்ணி உணர்வதே அறம் என்ற பரந்துபட்ட சிந்தையில் எமது மக்களை உந்தும் புரட்சிகரநாள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீரத்தின் உச்சத்துக்கு எடுத்துச்சென்ற எமது வீரர்களைப் பெற்றெடுத்தோரும் அவர்தம் குடும்பத்தினரும் என்றும் போற்றுதற்குரியவர்கள். இங்கு மாவீரச் செல்வங்களுக்குச் சுடரேற்றி வணக்கம் செலுத்த முடியாது. மாவீரர் துயிலுமில்லங்கள் இடித்தழிக்கப்பட்டு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இறந்தவர்களை நினைவுகூருதல் தொடர்பான அனைத்துலக சட்டங்களைப் புறந்தள்ளி. தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத அளவிற்குத் தடுத்து நிறுத்தியுள்ளபோதிலும் எம்மினத்திற்காக வீரகாவியமானவர்களை ஆண்டுதோறும் நினைவேந்தி வருகின்றோம்.

இன்று எமது மாவீரர்களினதும் எமது மக்களினதும் அளப்பெரிய உயிர் அர்ப்பணிப்புகளாலும் அடிபணியா வீரம் செறிந்த வாழ்வியலாலும் வளர்த்தெடுத்த தமிழ்த் தேசியம் எனும் பெருவிருட்சம் நாடுகள். எல்லைகள் கடந்தும் தலைமுறைகள் கடந்தும் பெருவளர்ச்சியுற்று நிற்கின்றது. இது வெறும் பூடகமான கருத்துருவாக்கமோ பொருளற்ற கருத்துப் படிமமோ அல்ல. பதிலாக. உலகமெங்கும் பரந்து வாழும் தமிழ் இனத்தின் பண்பாட்டு. மொழியியல். வாழ்வியல் செழுமையின் உச்சமான ஓர் உயிர் இயக்கமாகும். ஓர் பெரும் நாகரிகத்தை. அகம் புறம் சார்ந்த வாழ்வியலை. தொன்மையான வளமான மொழியை. காலங்காலமாக அடிபணிய மறுத்த வீரஞ்செறிந்த மறவர்களின் வித்துடல்களைக் கருவாகக்கொண்ட ஓர் தேசத்தின் உயிர் மூச்சாகும். இதுவே. தாயகம் தொட்டு உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் அர்த்தம் செறிந்த வாழ்வியலின் மையமாகவும் அமைந்துள்ளது.

தலைமுறைகள் கடந்தும் தேசங்கள் கடந்தும் ஓர் பெரும் விடுதலைப்போரின் பேரியக்கமாக மலர்ந்து நிற்கின்றது இவ்வுயிரியக்கம். ஓர் தேச மக்களாக. நாம் முகங்கொடுத்த இன அழிப்புகள் நிறைந்த வாழ்வியலும் ஈழத்தமிழின வரலாறும் திரிபுகள் மறைப்புகள் கடந்து. அடுத்துவரும் இளந்தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு. எமக்கானதோர் தாயகம் வேண்டுமென்ற உயிரோட்டமானது தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டுப் போசிக்கப்படும்போதே. எமது விடுதலையின் கருவானது கலையாமலிருப்பது உறுதியாகும். அத்துடன் உலகெங்கும் பரந்து வாழும் நாம். எமது மொழி. கலைகள். பண்பாடு என்பன செழுமையும் உயர்ச்சியும் அடையும் வகையில் பேணிப்பாதுகாத்து. எமது தேசிய இனக்கூட்டுணர்வை மேலும் வலுவூட்டல் அவசியம். இதுவே. நாம் எமது மாவீரர்களுக்குச் செய்யும் உண்மையான அகவணக்கமாகும்.

பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் இராணுவமேலாதிக்கத்தை அடக்கி. அதனைத் தமிழரின் மறத்தின் முன்பு மண்டியிடச் செய்து. தன்னாட்சியடிப்படையில் தனித்தமிழீழம் அமைக்க தமிழரால் முடியும் என்று பலமுறை களமுனையில் நிரூபித்துக்காட்டியும் ஈழத்தமிழரின் விடுதலைப்போர். இத்தகைய இடர்நிலைக்கு வந்தமைக்கு. பன்னாட்டு வல்லாண்மையாளர்கள் தமது நலன்களிற்காக பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை அரசுக்குக் கொடுத்த ஒத்துழைப்பே காரணமென்பதை உலகத்தமிழர்கள் ஐயந்திரிபுறப் புரிந்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய எமது புரட்சிகர விடுதலை இயக்கத்தையும் அதனால். ஆளுகைக்குட்படுத்தப்பட்டுவந்த தமிழர்களின் தமிழீழத் தேச அரசையும் அழிப்பதற்காக. உலகெங்கும் ஒத்துழைப்புத் தேடி சிறிலங்கா அரசினால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் எண்ணிலடங்காதவை. எமது தாயகத்தில் சிங்கள அரசானது தமிழ் மக்களின் இறையாண்மையினை அழித்துத் தனது மேலாதிக்கத்தினை செலுத்தவேண்டுமென்று திட்டமிட்டுச் செயற்படுவதால். தனது இறையாண்மை யினையும் இழந்துவருவதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். சிங்கள தேசமும் அதனால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகமும் இறையாண்மையுள்ள தேசங்களாக இயங்கும்போதுதான். எமது தேசங்களை பாதுகாக்கமுடியும். சிங்கள அரச தலைவர்கள். எமது தேசங்களைக் கூறுகளாகப் பிரித்து வல்லரசுகளிடம் பல தசாப்தங்களுக்கு அடைவுவைக்கப்பட்டு வருவதை சிங்கள மக்கள் பார்த்துக்கொண்டிருப்பீர்களாயின் பின்னர் நீங்களும் தமிழ் மக்களைப்போல் தேசவிடுதலைக்காகப் போராடவேண்டிய காலம் விரைவில் வரும் என்ற யதார்த்தத்தினை மறந்துவிடவேண்டாம்.

ஆனாலும் சிங்கள தேசம். தாம் எத்தகைய சிக்கலில் சிக்குண்டு துன்பத்தில் துவண்டாலும் அது தமிழர்களது நிலங்களை வன்பறிப்புச் செய்வதிலும் தமிழர்களது சமூகப் பொருண்மிய வாழ்வியலை அழிப்பதிலும் தமிழர்கள் ஒரு தேசமாக இருப்பதைத் தடுப்பதிலும் தன்னாலியன்ற அத்தனையையும் செய்யத்தான் போகிறது. தமிழினத்தை வேரோடு அழிக்கவேண்டும் என்ற மகாவம்ச வக்கிர மனநிலையிலிருந்து. அதனால் ஒருபோதும் வெளிவர முடியாது. பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் உருவாக்கமும் இருப்பும் அப்படித்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் விடுபட்டு. ஒரு அடிப்படை மாந்தர்களாகவேனும் வாழ. தமிழினம் தனது தேச விடுதலைக்காகத் தொடர்ந்தும் போராடவேண்டும்.

இன்றைய உலக ஒழுங்கு மாறிவருகிறது. சர்வதேச அரசியல் உறவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. சீன தேசத்தின் அரசியல். பொருளாதார எழுச்சியும் அதை மையமாகக் கொண்டு உலகிலும் குறிப்பாக. இந்தோ - பசுபிக் பிராந்தியத்திலும்



நிகழ்ந்துவரும் பூகோள அரசியல் மூலோபாய நகர்வுகளும் உலக ஒழுங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பெரும் சக்திமிக்கப் பிராந்திய சர்வதேச அரசுகளுக்கிடையிலான மூலோபாய உறவுகளும் கூட்டுகளும் போட்டிகளும் என வலுச்சமநிலை நோக்கிய நகர்வுகள் நிகழ்ந்துவருகின்றன. அரசற்ற ஓர் தேசமாகத் தமிழினத்தையும் அவர்களின் அரசியல் இராஜதந்திர விடுதலை முனைப்புகளையும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகப் பொருளாதார நலன்களை மையப்படுத்திய சர்வதேசத் தாராளமய உலக ஒழுங்கு. பல தசாப்தங்களாகத் தாக்கம் செலுத்தி வந்துள்ளது. தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையில் நிகழ்ந்த. சர்வதேச அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் இறுதியில் நிகழ்ந்த பெரும் இன அழிப்புப் போரிலும் அதனை வெளிப்படையாகவே தமிழர் தேசம் அனுபவித்திருந்தது.

2002 ஆம் ஆண்டு. தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையில் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் சர்வதேசச் சமூகம் நிகழ்த்தியிருந்த சந்திப்புகளும் பேச்சுகளும் எண்ணிலடங்காதவை. சீன மற்றும் ஜப்பானிய உயர்மட்ட இராஜதந்திரிகள் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது வர்களும் மேற்குலக அரசுகளான சுவீடன். யேர்மன். நெதர்லாந்து. பிரித்தானியா. நோர்வே. சுவிற்சர்லாந்து. கனேடிய இராஜதந்திரிகளும் தொடர்ச்சியாக ஈழத்தமிழ் மக்களின் தலைமையான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இராஜதந்திர அரசியல் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தனர். உலகத் தமிழின வரலாற்றில் முதன் முறையாக சர்வதேச இராஜதந்திர சமூகம் தமிழர்களின் அரசியற் தலைமையுடன் தேடிவந்து பேச்சுகளில் ஈடுபட்ட ஓர் காலகட்டமாக அது இருந்தது.

ஓர் தேசமாகத் தமிழினம். உறுதியுடனும் தெளிந்த பார்வையுடனும் சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவாகத் தமது அடிப்படை அரசியல் உரிமைகளான சுயநிர்ணய உரிமை. தாயகம். தேசியம் ஆகியவற்றினடிப்படையில் சர்வதேசச் சமூகத்தின் அனுசரணையுடன் சிங்கள தேசத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தது.

இவ்வாறானதோர் வரலாற்றுச் சூழமைவில். இன்று எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புகளில் இப்பூகோள அரசியல் போக்கினை ஆழமான அவதானிப்புக்குட்படுத்தத் தவறுவோமாயின். அரசியல் இராஜதந்திரப் பாதையில் தடைப்பட்டு. அடையாளம் இழந்து போகும்நிலைக்குத் தள்ளப்படுவோம். தமிழர் தாயகத்தில் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உண்மையுடனும் உறுதியுடனும் முன்னெடுக்கும் ஆற்றல்மிக்க போதிய தலைமைகள் இல்லாத நிலையில். சில வலுமிக்க மேற்குலக அரசுகளும் பிராந்திய அரசுகளும் தத்தமது நலன்களைப் பேணும் வகையில் தமிழ் மக்கள் மீது அரசியல் தீர்வுகளைத் திணிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. அத்துடன். ஈழத்தமிழ் மக்களின் இன அழிப்புக்கான நீதிக்கான முன்னெடுப்புகளைச் சர்வதேச அரங்குகளில். தமது பூகோள அரசியல் நலன்களுக்கேற்றவாறாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஓர் அரசியல் உதைப்பந்தாகவே மாற்றியுள்ளன. இதைப் புரிந்துகொண்டு சிங்கள அரசியலமைப்புக்குள் தீர்வுதேடும் தமிழ் அரசியற்கட்சிகள் தமது கொள்கைகளை மாற்றி எமது விடுதலைக்காக ஒன்றிணைந்து குரல்கொடுக்கவேண்டும்.

இங்கு. நாம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். சர்வதேச பூகோள அரசியல் குறித்துக் கூறிய கருத்துகளை நினைவிற்கொள்வது மிகவும் பொருத்த மாகும். "இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகிறது. மனித உரிமை. மக்கள் உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க. பொருளாதார வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன". இன்று இதன் உண்மைத்தன்மையை முன்பு போலவே ஆனால். ஓர் புதிய உலக ஒழுங்கமைவில் நேரடியாகவே அனுபவித்து வருகின்றோம். சர்வதேச உறவுகளில் நிரந்தரமான நட்பு சக்திகளோ அல்லது எதிர்ப்பு சக்திகளோ இன்றி. தனியே தேச அரசுகளின் நலன்களே நிரந்தரமாகவுள்ள ஓர் ஒழுங்கமைவில் வாழ்கிறோம்.

ஓர் தேச மக்களாக ஒன்றுபட்டு நின்று. தெளிவான அரசியல் நலன்கள் சார்ந்த நிலைப்பாடுகளுடனும் மூலோபாயச் சிந்தனைகளுடனும் செயற்படுவதானது மிகவும் அவசியமானது. இல்லையெனில். அரசுகளாலும் அவர்கள் சார்ந்த அமைப்புகளாலும் அவர்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் வெறும் சதுரங்கக் காய்களாக அகப்பட்டு. நாம் எமது இறைமையையும் அடையாளத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

சர்வதேச மற்றும் பிராந்திய அரசுகளின் நலன்களுக்கோ இறைமைக்கோ. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட் டங்களும் இன அழிப்புக்கான நீதி கோரிய முன்னெடுப்புகளும் எக்காலத்திலும் எதிராக இருந்தது கிடையாது.

13ஆம் பக்கம் பார்க்க...

**மறவன்**

# இலங்கையின் பொருளாதாரம்



இலங்கையின் பொருளாதாரத்தினை பொதுவாக அபிருத்தியடைந்து வரும் அல்லது குறைவிருத்திப் பொருளாதாரம் என வரையறை செய்வது மரபாகும். அத்துடன் இலங்கையின் பொருளாதார அமைப்பானது ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்தினைப் போன்று இரட்டைத்தன்மை வாய்ந்தது எனப் பல பொருளியலாளர்களாலும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இரட்டைப் பொருளாதாரம் எனும்போது தொழில்நுட்பம், மூலவளங்களின் பயன்பாடு, நாணயமயம் ஆகியவற்றினைப் பொறுத்தமட்டில் அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்ட இருபெரும் துறைகளைக் கொண்ட அமைப்பினைக் குறிப்பதாகும். இதில் நவீன துறையானது பெருந்தோட்டம், வர்த்தகம், நிதி, போக்குவரத்து, பொதுத் தொடர்புகள் போன்ற ஏனைய சேவைகளையும் கொண்ட அரசாங்க - தனியார் துறைகளை உள்ளடக்கியதாகும் என வரையறை செய்யப்படுகின்றது.

வேறு சில மேற்கத்தேய பொருளியலாளர்கள் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் முத்தன்மைப் பொருளாதார அமைப்பினைக் கொண்டதென வாதிடுகின்றனர். இந்த முத்தன்மையானது நகர்ப் பொருளாதாரம், பெருந்தோட்ட பொருளாதாரம், கிராமிய பொருளாதாரம் என வகைப் படுத்தப்படுகின்றது. நகர்ப் பொருளாதாரம் எனும்போது வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள், அரசாங்க காரியாலயங்கள் ஆகியவற்றினை அதிகளவில் கொண்ட நவீன பணப் பொருளாதாரத்தினை குறிப்பதாகும். பெருந்தோட்டப் பொருளாதாரம் ஏற்றுமதி விவசாயத் துறையினையும், கிராமிய பொருளாதாரம் மரபு ரீதியான விவசாயத்துறையினையும் பெருமளவு உள்ளடக்கியதாக விருக்கும். அந்த வகையில் *1800 – 2000* இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்திய காரணிகளை நோக்குவோம்.

இலங்கையில் நவீன பொருளாதாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பெருந்தொட்ட விவசாயத்துடன் தோன்றி வளர்ந்த தொன்றாகவேயுள்ளது. மானிய சமுதாயத்தின் சிதைவு, வங்கி நாணயமறை, வீதிப்போக்குவரத்து, வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் தோற்றம், மத்திய வகுப்பினரது வளர்ச்சி என்பன பெருந்தோட்ட விவசாயத்தின் பின்பே ஏற்பட்டதெனலாம். ஆரம்பகாலத்தில் போர்த்துக் கேயரைப் போலவே ஒல்லாந்தரும் வர்த்தகப் பயிர்களைச் செய்கை பண்ணும் கொள்கையை மேற்கொள்ளவில்லை. காடுகளில் இயற்கையாக விளைந்த கறுவாவை தோட்டங்களில் பயிரிட ஆரம்பித்தவர்கள் ஒல்லாந்தரே ஆவர். ஆரம்பத்தில் கறுவாவும் பின்னர் கோப்பி, மிளகு, என்பனவற்றையும் பயிரிடத் தொடங்கினர். இன்றைய கொழும்பு, கறுவாத்தோட்டம், கதிரான, எவரிவத்த போன்ற பிரதேசங்களில் ஒல்லாந்தரால் கறுவாச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஒல்லாந்தரால் முதன் முறையாக இலங்கையில் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கைக்கான அத்திவாரம் இடப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன்படிக்கை முடிவெய்த அடுத்த ஆண்டில் அரசாங்கமே கறுவா வியாபாரத்ததில் ஏகபோக உரிமை கொண்டிருந்தது. ஆனால் *1833*க்கு பின்னர் கறுவாவுக்கு உலகத்தில் இருந்த மதிப்பு மெல்ல மெல்லவாகக் குறைந்து வந்தது. இலங்கைக் கறுவாவின் விலை மிகக் கூடுதலாக இருந்தது.

இலங்கையின் பொருளாதாரம் ஆரம்பத்தில் சுயதேவை பொருளாதாரமாகவே காணப்பட்டது. ஆனால் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் விளைவாக இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதாரம் பரவ ஆரம்பித்தது. அந்தவகையில் கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் இலங்கை பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்திய முக்கிய காரணியாகும். கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் பொருளாதார மாற்றங்களாவன:

- ஐரோப்பியர் இந்த நாட்டில் தங்கியிருப்பதற்கும் நிலத்தை உடைமையாக்கிக் கொள்வதற்கும் இருந்த உரிமைகள் இல்லாமலாக்கப்பட்டது.

- உள்நாட்டு வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கு தேவையான மட்டும் நிலத்தை உடைமையாக்கிக் கொள்வதற்கு ஒரு கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இந்த நாட்டில் தங்கியிருப்பதற்கும், முதலீட்டை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கும் தாராண்மைவாத ஆட்சிமுறை உருவாக்க சட்டவாக்க சட்டநிர்வாக கழகம் உருவாக்குவதனை கோல் புறூக் குழுவினர் முன்வைத்தனர்.

- **ஊழியர்களை பெற்றுக்கொள்வதற்காக கட்டாய இராஜகாரிய முறை இல்லாது ஒழித்தல்.**
- **தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்படல்.**
- **அரசாங்கம் வர்த்தகத்தில் செலுத்திவந்த ஏகபோக உரிமை நீக்கப்பட்டது.**
- **முதலீட்டாளர்களுக்கு தடையாக காணப்பட்ட வரி முறைகள் மறு சீரமைக்கப்பட்டது.**

மேற்கூறப்பட்ட சிபாரிகள் கோல் புறூக் குழுவினரால் முன் வைக்கப்பட்டது. அவை நடை முறைப்படுத்தப்பட்ட வேளை இலங்கையில் பெருந்தோட்டத்துறை பொருளாதாரம் விருத்தியடைய செல்வாக்கு செலுத்திய ஓர் காரணியாகும்.

இலங்கையில் *1830*ஆம் ஆண்டிற்குப் பின்பு குடியானவனின் பயிராகப் பயிரிடப்பட்ட கோப்பி ஐரோப்பிய முயற்சியாளரினால் வர்த்தக அடிப்படையில் பயிரிடப்பட்டதைத் தொடர்ந்தே பெருந்தோட்ட விவசாயத்தின் வரலாறு ஆரம்பமானது எனலாம். *1870*க்குப் பின்பு, கோப்பியின் வீழ்ச்சிக்குப் பின்பு முதலில் தேயிலையும் பின்பு இறப்பர், தென்னை ஆகிய பயிர்களும் பெருமளவில் பெருந்தோட்ட அடிப்படையில் பயிரிடப்பட்டதைத் தொடர்ந்து, பரந்த அடிப்படையில், இலங்கையில் பெருந்தோட்ட விவசாயமானது வளர்ச்சியடைந்தது. உலக சந்தையில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களுக்கு ஏற்பட்ட பெரும்கேள்வியும் உயர்ந்த விலையுமே இலங்கையில் இம்மூன்று பயிர்களும் பெருமளவு பயிரிடப்படுவதற்குக் காரணமாகும். இன்று இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய *75* சதவீதத்திற்கும், மொத்தத் தேசிய வருமானத்தில் *13* சதவீதத்திற்கும் இம் மூன்று பயிர்களும் பொறுப்பாக இருப்பதுடன், மொத்த ஊழியப்படையில் *25* சதவீதத்திற்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் துறையாகவும் இது காணப்படுகின்றது. நீண்டகாலமாக இத்துறையின் இலாபமானது ஐரோப்பிய உடைமையாளர்கள், தோட்டத்துரைமார்கள், உள்நாட்டு முயற்சியாளர்கள் ஆகியோராலேயே பங்கிடப்பட்டது.

கோப்பி ஏற்றுமதியின் மூலம் அதிக வருமானம் கிடைத்தது. *1837 – 1847* காலப்பகுதியில் மலையகப் பிரதேசத்தில் கோப்பிச் செய்கை வேகமாக விருத்தியடைந்தது. தும்பறை, கம்பளை, பேராதனை, மாத்தளை, உடுகம முதலிய பிரதேசங்களில் கோப்பித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கோப்பி உற்பத்தி அதிக இலாபத்தைத் தந்தமையால் அரச அதிகாரிகள் *500*க்கும் அதிகமான கோப்பித் தோட்டங்களை ஏற்படுத்தினர். இக்காலப்பகுதியில் மலையகத்தில் நிலவிய அரசியல் உறுதிப்பாடு மற்றும் சமாதான சூழல் காரணமாகவும் வர்த்தகத்தின் அனுகூலங்களைக் கண்டி மக்கள் பரவலாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு உருவாகியதாலும், அப்பகுதிகளில் குடியானவர் கோப்பிச் செய்கையும் வேகமாக விரிவாக்கம் பெற்றது.

*1824*இல் இலங்கையின் ஆளுனராகப் பதவியேற்ற எட்வேர்ட் பாண்ஸ் இலங்கையில் கோப்பிக் கைத்தொழிலின் பிரகாசமான எதிர்காலம் குறித்து மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த நிலையில் அரசாங்கத் தரப்பிலிருந்து பெருந்தோட்ட அடிப்படையிலான கோப்பிச் செய்கைக்குப் பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. கோப்பி ஏற்றுமதி தீர்வையினை நீக்கியமை, கோப்பிச் செய்கை நிலங்களுக்கு நிலவரி விலக்கு வழங்கியமை, கோப்பிச் செய்கை மற்றும் கோப்பியினை பதனிடுதல் தொடர்பான உபகரணங்கள், கருவிகளுக்கு இறக்குமதி தீர்வைகள் அகற்றப்பட்டமை போன்றவை அவற்றுள் சிலவாகும். அத்துடன் ஆளுனர் பாண்ஸ் *1825*இல் விதிக்கப்பட்ட தீர்வைகளை நீக்கினார். அவர் கோப்பிச் செய்கையை விருத்தி செய்வதற்காக கோப்பி கொட்டை ஏற்றுமதியின் மீது இதுகாறும் விதிக்கப்பட்டிருந்த *5* சதவிகித ஏற்றுமதி வரியை *1820*இல் நீக்கினார். கோப்பித் தோட்டங்களுக்குரிய நிலவரியை (விளைவின் *1/10*) *1825*இல் நீக்கினார். *1829*இல் விவசாய உபகரணங்களின் இறக்குமதித் தீர்வையை அகற்றியதுடன் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டோரை இராசகாரிய சேவையிலிருந்தும் நீக்கினார். கோப்பிச் செய்கைக்கு நிலங்களை *1826*ஆம் ஆண்டு வரையும் இலவசமாக வழங்கினார்.

கோப்பி பயிர்ச்செய்கைக்காக அரசாங்கத்தின் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளான *1840*ஆம் ஆண்டு தரிசு நிலச்சட்டம், குத்தகை பாதுகாப்புக்கள், வரிச்சலுகைகள், ஒப்பந்தச் சட்டங்கள், நில அளவைப் பகுதி, பதிவாளர் நாயகம் பகுதி அமைக்கப்பட்டமை கோப்பி வளர்ச்சிக்கு உதவியது.

கைத்தொழில் புரட்சியின் விளைவாக இங்கிலாந்திலே ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் குடிப்பழக்கத்துக்கு ஆளானார்கள். உவெஸ்லி என்பவரின் நற்போதனைகளால் ஒழுங்குக்கொள்கை எனப்படும் "மெதடிஸ்ற்" இயக்கம் பரவ குடிப்பழக்கம் குறைந்தது. கோப்பி குடிக்கும் பழக்கம் ஐரோப்பாவில் பரவியது. அதனாலே இங்கிலாந்தில் மாத்திரமின்றி பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்களிலும் இலங்கைக் கோப்பி விற்பனை செய்யப்பட்டது. இலங்கைக் கோப்பிக்கு நல்ல மதிப்பு கிடைத்தது.

*1870*க்குப் பிந்திய ஆண்டுகள் விசேடமாக *1872* முதல் *1877* வரை ஆள்பதியாக இருந்த வில்லியம் கிரகறியின் காலம் தான் இலங்கைக் கோப்பியின் பொற்காலமாக இருந்தது.

இலங்கையில் கோப்பி பயிர் வீழ்ச்சியடையவே கோப்பிக்கு பதிலாக சிங்கோனா பயிரிடப்பட்டது. இதன் பயனாக *1875* இல் *5000* ஏக்கர் நிலம் இப்பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டது. சிங்கோனாவிலிருந்து பெறப்பட்ட இலாபம், கோப்பிச் செய்கையின் வீழ்ச்சிக்கும் தேயிலையின் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தின் வெற்றிடத்தை நிரப்ப உதவியது. **(தொடரும்...)**

**நெற்றிப்பொறியன்**



# பிராந்திய செய்திகள்



## வருடாந்த மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு வைபவமும்



கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இவ்வருடமீலாதுன்நபி விழா நிகழ்வுகள் அதிபர் செல்லத்தம்பி கலையரசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதி கல்விப்பணிப்பாளர் பீ.ஜிகானா ஆலிப் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக கல்முனை தமிழ் பிரிவு கோட்டக்கல்வி பணிப்பாளர் ச.சரவணமுத்து அவர்களும் விசேட அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், மருதமுனை உலமா சபை தலைவருமான எப்.எம்.அஹமட் அன்சார் மௌலானா நளீமி அவர்களும், சிறப்பு அதிதிகளாக இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிட்ட ஆலோசகர் எம்.ஐ.எம்.வலீத், கல்முனை கல்வி வலய இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் யூ.எல்.றிபாயுடீன் ஆகியோருடன் முன்னாள் அதிபர்கள், கல்முனை வலய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை மற்றும் பழைய மாணவர் அமைப்பின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இன ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டதுடன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற முனைகின்றார்கள் – ரவிகரன் குற்றச்சாட்டு

தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற முனைகின்றார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். கொக்குதொடுவாய் 15 ஆம் கட்டை பகுதியில் குடியேற்ற முயற்சி இடம்பெறுவதாக அப்பகுதி கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டதனையடுத்து கடந்த (15.11.2023) நேரில் களவிஜயம் மேற்கொண்டு அவ் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், ஏற்கனவே புலிபாய்ந்தகல் அதனோடு சேர்ந்த பகுதிகளிலும் அத்துமீறி தொழில் மேற்கொண்டிருந்ததனை சுட்டிக்காட்டி பிரதேச செயலகத்திற்கு அறிவித்திருந்தோம். அதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதேச செயலகத்தினால் தகவல் வழங்கி இருந்தார்கள்.

இந்நிலையில் கொக்குதொடுவாய் வடக்கு கடற்தொழில் சங்க தலைவருக்கு எதிராக குறித்த பகுதியில் தொழில் செய்யும் நபர் ஒருவரால் குறித்த இடத்தில் தாம் தொழில் மேற்கொள்வதிலிருந்து அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடு போடப்பட்டமையையடுத்து கொக்குளாய் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். அவர்கள் பொலிஸ் நிலையத்தில் கூறும்போது புத்த பிக்கு தங்களுக்கு தந்த இடம் எனவும். இந்த இடத்தினை எடுத்து விட்டோம். ஆகவே வாடி போட்டு தொழிலினை மேற்கொள்வோம் என்ற வகையில் கடற்தொழில் சங்க தலைவரோடு கதைத்திருக்கிறார்கள்.

நீரியல் வள திணைக்களத்தினர் சட்டவிரோத நடவடிக்கைகளை எடுக்க முனைவதில்லை. இவ்வாறான நிலையில் தான் குடியேற்றங்களை இலக்கு வைத்து புலிபாய்ந்தகல் தொடக்கம் இப்பகுதிவரை சிங்கள மக்கள் குடியேறி தமிழ் மக்களை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்ட வடிவத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இருக்கையில் நாங்கள் இவ்விடத்திலுள்ள வாடிக்கு அருகே சென்று பார்த்த போது அவர்கள் வைத்திருந்த சட்டவிரோதமான சுருக்கு வலையினை மூடிவிட்டு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள். பட்டப்பகலிலே சுருக்கு வலையினை கொண்டு தொழில் செய்யும் நடவடிக்கைகள் இவ்விடத்தில் அரங்கேறி கொண்டு இருக்கின்றது.

முல்லைத்தீவில் கடற்தொழில் திணைக்களம் என்னத்திற்காக இருக்கிறார்கள்? சட்டவிரோத நடவடிக்கைகளை பார்ப்பதற்கா? அல்லது சட்டவிரோத தொழிலை ஊக்குவிப்பதற்கா? கொக்குளாய் தொடக்கம் பேய்ப்பாறைப்பிட்டி வரையான இடங்களை முல்லைத்தீவு கடற்தொழில் திணைக்களம் கடல்சார் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டியது அவர்களது பொறுப்பு. வேலைகளை செய்யாது சம்பளம் எடுக்கவா இங்கே இருக்கிறார்கள். சரியான சட்டதிட்டங்களுக்கு அமைய பதிவு செய்து அந்த பதிவுகளின் மூலமாக தொழில் செய்பவர்களை தவிர அத்துமீறி குடியேறி தங்கள் குடும்பங்களை கொண்டு வந்து குடியேற்றி இந்த இடங்களை அழிக்க வேண்டும்.

அல்லது தமிழ் மக்களை துரத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை விட்டு உங்களுடைய இடங்களுக்கு செல்லுங்கள். இங்கே வந்து சட்டவிரோத தொழில், குடியேற்ற முயற்சி ஊக்குவிப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் என்பதை கேட்டு கொள்கிறேன். இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் கதைக்க இருக்கின்றேன். அத்துமீறிய சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பது தான் மக்களதும் எமது கோரிக்கையுமாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

## கடலட்டை பிடிப்போருக்கான அனுமதி தொடர்பில் விசேட கலந்துரையாடல்



கோந்தைப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள கடற்தொழில் இறங்குதுறை தொடர்பாகவும், மன்னாரில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுபவர்களுக்கான அனுமதிகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பானது கடந்த (15.11.2023) கடற்தொழில் அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது, "மன்னார்- கோந்தைப்பிட்டி இறங்குதுறைப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை தொடர்பில் கலந்துரையாடினோம்.

இதனையடுத்து கடற்றொழிலாளர்கள் தடைகளின்றி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன். மன்னாரில் கடலட்டை பிடிப்பவர்களுக்கான அனுமதி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கான அனுமதி தொடர்பாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாட வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## நிதியினை வழங்கி எமது பிரச்சினைகளை தீர்வுகாண முடியாது – காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களின் தலைவி



எமக்கு பணமோ, பொருளோ வேண்டாம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு வரவு செலவு திட்டத்தில் நிதியினை வழங்கி எமது பிரச்சினைகளை தீர்வுகாண முடியாது என வட மாகாண காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களின் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார். கடந்த (14) கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் இதனைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது உறவுகள் எமது பிள்ளைகளை எமக்கு பெற்றுத்தர வேண்டும். அதற்கான தீர்வையும் தரவேண்டும் என வலியுறுத்தியே தாம் கடந்த 14 வருடமாக போராட்டங்களை நடத்திவருகிறோம். O.M.P அலுவலகம் என புதிய புதிய அலுவலகங்களை திறந்து வைக்கின்றார்கள். அவர்கள் எதும் எமக்கு தெரியாமல் எவருக்கும் இழப்பிடு வழங்குகிறார்களோ தெரியாது. இதுவரையில், எமக்கு நிதி வழங்கப்படவில்லை. அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் எவருக்கும் பணம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சர்வதேச அமைப்புகளிடம் கூட கதைத்து வருகிறோம். எந்தவித தீர்வும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. ஒவ்வொரு வருடமும் வரவு செலவு திட்டத்தின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கென நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்த நிதி எந்த வகையிலும் தமக்கு கிடைக்கப் பெறுவதில்லை" என குறிப்பிட்டுள்ளார்.

## கடற்கரை பகுதியில் அமைந்துள்ள கோபுரத்தை பாதுகாக்க நடவடிக்கை முன்னெடுப்பு

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை பிரதேசத்திற்கு அடையாளமாக திகழும் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள கோபுரத்தை கடலரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கமைய அப்பகுதிக்கு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி உட்பட கரையோரங்கள் பேணல் பாதுகாப்பு திணைக்கள பொறியியலாளர் துளசிதாசன், கரையோரங்கள் பேணல் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர் எம்.எஸ்.அஹமட் மஹ்ருப் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

மருதமுனை பிரதேசத்திற்கு அடையாளமாக திகழும் கோபுரத்தில் கடந்த 2022ம் ஆண்டு கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த நேரம் இப்பகுதி மக்களினாலும் எமது கரையோரங்கள் பேணல் திணைக்களத்தினாலும் கடலரிப்பை தடுப்பதற்கு தற்காலிகமாக உரப்பை கொண்டு தற்காலிக அணைக்கட்டு அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. ஆனால் இவ்வாண்டு கடலரிப்பு அகோரமாக இருப்பதனால் இப்பிரச்சினைக்கு நிரந்திர தீர்வினை காண்பதற்கு எமது திணைக்களத்தின் முழுமையான உதவியுடன் கல்முனை பிரதேச செயலாளரின் வேண்டுகோளிற்கிணங்க இத்திட்டமானது 1.7 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# சினி துளிகள்

## பரபரப்பாக பேசிய கார்த்திக் சுப்புராஜ்



தமிழ் சினிமாவின் பிரபல இயக்குனர்களில் ஒருவராக வலம் வந்து கொண்டு இருப்பவர் கார்த்திக் சுப்புராஜ்.

சமீபத்தில் இவர் இயக்கத்தில் லாரன்ஸ் – எஸ்.ஜே.சூர்யா நடிப்பில் ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் திரைப்படம் வெளியானது.

இப்படத்திற்குரசிகர்கள் அமோக வரவேற்பு கொடுத்து வருகின்றனர். இதுவரை இப்படம் 45 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் பத்திரிகையாளர்களை சந்தித்த கார்த்திக் சுப்புராஜ் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

அதில் அவர் கூறுகையில், "படத்தில் எவ்ளோ திரையரங்கில் வெளியிடுகிறார்கள் அந்த படம் எவ்ளோ வசூல் செய்தது, தயாரிப்பாளருக்கு எவ்ளோ லாபம் கிடைத்தது என்ற விஷயம் ரசிகர்களுக்கு இயக்குனர்களுக்கு தேவையில்லாத ஒன்று". "நல்ல சினிமா ஆரோக்கியமான சினிமா என்றால் இப்படி தான் இருக்க வேண்டும்" என்று கார்த்திக் சுப்புராஜ் கூறியுள்ளார்.

## கிரிக்கெட்டை வைத்து படம் இயக்கும் கவுதம் மேனன்

இந்திய சினிமாவில் இதுவரை கிரிக்கெட்டை வைத்து பல படங்கள் வெளிவந்துள்ளது. ஜீவா. கனா. 83. எம்.எஸ்.தோனி வாழ்க்கை வரலாறு. சச்சின் வாழ்க்கை வரலாறு. ஜெர்சி. சென்னை 28 என கிரிக்கெட்டை மையமாக படங்கள் வெளிவந்துள்ளது.

அடுத்ததாக தமிழில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள லால் சலாம் திரைப்படமும் கிரிக்கெட் விளையாட்டை தான் கதைக்களமாக கொண்டுள்ளது.

இந்நிலையில். இயக்குனர் கவுதம் மேனனும் கிரிக்கெட் கதைக்களத்தில் ஒரு படத்தை இயக்க தயாராகி வருகிறாராம்.

இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடிய காம்ப்லி மற்றும் சச்சின் இருவரை மையாக கொண்டு இப்படத்தில் உள்ள இரண்டு முதன்மை கதாபாத்திரத்தை வடிவமைத்துள்ளாராம்.

ஆனால். இது தமிழ்நாட்டில் நடக்கும் கதையாக எடுக்கப்போவதாக கூறியுள்ளார். நடந்து வரும் ஐசிசி கிரிக்கெட் உலக கோப்பை கமெண்ட்ரியில் கலந்துகொண்ட கவுதம் மேனன். தன்னுடைய கிரிக்கெட் படம் குறித்து கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.






## ஓபனாக பேசிய நடிகர் கார்த்தி



தமிழ் சினிமாவில் நடிகர் சூர்யாவின் தம்பி என்ற அடையாளத்தோடு நாயகனாக பருத்திவீரன் படத்தில் அறிமுகமாகி இப்போது தனக்கென்று தனி அடையாளத்தை உருவாக்கிக் கொண்டவர் தான் நடிகர் கார்த்தி.

உதவி இயக்குனராக இருந்து இப்போது சிறந்த நடிகராக உருவாகி இருக்கும் கார்த்தி நடிப்பில் அண்மையில் ஜப்பான் என்ற திரைப்படம் வெளியாகியுள்ளது. கார்த்தியின் 25வது படம் வெற்றிகரமாக அமைந்துள்ளதா என்றால் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது என்று தான் கூற வேண்டும்.

இப்பட புரொமோஷன் நிகழ்ச்சி ஒன்றில் கார்த்தி பேசும்போது, பையா படத்திற்கு பிறகு என்னையும் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை உணர்ந்தேன். இதனால் உடல் எடையை குறைக்க அதிகம் ஓட ஆரம்பித்தேன், ஆனால் பிரச்சினை என்னவென்றால் எனக்கு அவ்வளவு எளிதில் உடல் எடை குறையாது.

அந்த சமயத்திலெல்லாம் நான் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகுவேன். ஒரு நடிகனாக நான் மாற வேண்டும் என்று நினைத்தபொழுது கூட, நான் மிகவும் வலிமையான மனிதனாக மாற வேண்டும் என்று தான் நினைத்தேன். உணவு பழக்கங்களை மாற்றினேன், 70% நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்களோ அதை பொறுத்து தான் செயல்படுகிறது, மீதி 30 தான் உடற்பயிற்சி என பேசியுள்ளார்.

## பிரதீப் ரங்கநாதன் ஹீரோவாக நடிக்கும் படம் குறித்த அறிவிப்பு

கோமாளி படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து அடுத்ததாக லவ் டுடே படத்தை இயக்கினார். அப்படத்தை இயக்கியது மட்டுமின்றி ஹீரோவாக நடித்து அசத்தினார்.

மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்ற இப்படம் உலகளவில் ரூ.100 கோடிக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்தது. ஹீரோவாக அறிமுகமான படத்திலேயே ரூ.100 கோடி வசூல் செய்த ஹீரோ என்றால் பிரதீப் ரங்கநாதனை தான் சேரும்.

லவ் டுடே படத்தின் வெற்றியை தொடர்ந்து பிரதீப் ரங்கநாதன் நடிக்கவிருக்கும் படத்தின் அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளிவரவில்லை.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் தான் பிரதீப் ரங்கநாதன் நடிக்கவுள்ளார் என ஏற்கனவே தகவல் வெளியானது. இதைதொடர்ந்து தற்போது வெளிவந்துள்ள தகவலின்படி, இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கப்போகிறார் என கூறப்படுகிறது. மேலும் மிஸ்கின் மற்றும் எஸ்.ஜே.சூர்யா இருவரும் இணைந்து இப்படத்தில் நடிக்கிறார்களாம்.

காதல் மற்றும் செல்போன் டெக்னாலஜி வைத்து இப்படத்தின் கதைக்கரு உருவாகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் இப்படத்திற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## தமன்னாவுக்கு விரைவில் திருமணம்

கடந்த 2005ஆம் ஆண்டு வெளியான கேடி என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் தமன்னா.

அதனை அடுத்து இவர் நடித்த கல்லூரி என்ற திரைப்படம் வசூல் ரீதியாக வெற்றி பெறவில்லை என்றாலும் மக்கள் நல்ல விமர்சனமே கொடுத்தனர்.

தற்போது தமன்னாவுக்கு தென்னிந்திய சினிமாவில் பட வாய்ப்பு குறைந்ததால் பாலிவுட் படங்களில் நடித்து வருகிறார்.

தமன்னா – விஜய் வர்மா நீண்ட நாட்களாக டேட்டிங் செய்து வந்த நிலையில் இருவரும் திருமணம் செய்துகொள்ள இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

அடுத்த ஆண்டு இவர்களின் திருமணம் நடைபெற வாய்ப்புள்ளதாக சினிமா வட்டாரங்களில் பேச்சு எழுந்துள்ளது.

மேலும் திருமணத்திற்கு பின்பு தமன்னா சினிமாவில் இருந்து விலகிவிடுவார் என்றும் சொல்லப்படுகிறது.

## அஜித்துடன் கூட்டணியா?

தமிழ் சினிமாவின் உச்ச நடிகர்களில் ஒருவராக இருப்பவர் அஜித் குமார். இவர் இயக்குனர் மகிழ்திருமேனி உடன் கூட்டணி வைத்துள்ளார்.

தற்போது இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக வெளிநாட்டில் நடந்து வருகிறது.

இந்நிலையில் பேட்டி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அட்லீ, எனக்கு அஜித் சாரை ரொம்ப பிடிக்கும். அவருடன் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறேன்.

அவர் மட்டும் ஓகே சொல்லிவிட்டார் என்றால் கண்டிப்பாக ஒரு படம் பண்ணலாம். அஜித் சார் மாஸ் ஹீரோ. அதனால் அவருக்கு தகுந்த மாதிரி கதை இருக்கும் என்று அட்லீ கூறியுள்ளார்.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?

விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய பாச்சல் ஒன்று அன்றுதான் நிகழ்ந்தது. இது சாத்தியமாகுமா? சாதாரண இயக்கங்களால் மட்டுமல்ல பல்வேறு நாடுகளின் ஆதரவுடன் செயற்பட்ட உலகின் பல இயக்கங்களாலும் சாத்தியமாகாத ஒன்றை எந்தவொரு நாட்டினதும் ஆதரவு இன்றி தமிழ் மக்களின் பலத்தில் மட்டும் நிற்கின்ற விடுதலை புலிகள் சாதித்து விடுவார்களா கேள்வி எழுப்பிக்கொண்டிருந்த நேரத்தில் தான் அந்த பேரதிர்வு நிகழ்ந்தது.

வரலாற்றில் எந்தவொரு விடுதலை இயக்கமும் சாதிக்காத ஒரு சாதனையை அன்று விடுதலைப் புலிகள் சாதித்து இருந்தனர். அதுதான் கட்டுநாயக்க மீதான விடுதலைப் புலிகளின் முதல் வான்வெளி தாக்குதல். சரியாக *(26.03.2007)* அன்று நடந்த இந்த தாக்குதலால் சிறிலங்கா மட்டும் அதிரவில்லை. உலக நாடுகள் எங்கும் அதன் அதிர்ச்சியும் ஆச்சரியமும் எதிரொலித்தன.

தமிழர் தாயக நிலத்தை விழுங்கியபடி சிறிலங்கா இராணுவம் முன்னேறிக்கொண்டிருந்த போது விடுதலைப் புலிகளின் பின்வாங்கல்கள் பலவீனமாகவே பார்க்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் பலத்தையும் வளத்தையும் அழித்துவிட்டோம் என தூளுரைத்துக்கொண்டிருந்த மகிந்த அரசாங்கத்தின் பரப்புரைகளை விடுதலைப்புலிகளின் ஒரே ஒரு வான் தாக்குதல் சுக்குநூறாக அடித்துப்போட்டது. தரையையும் கடலையும் பார்த்துக்கொண்டிருந்த சிங்கள இராணுவம் வானையும் அண்ணாந்து பார்க்கவேண்டிய நிலைக்குத் தள்ளியது இந்தத் தாக்குதல்.

காலத்துக்குக் காலம் தேவைகளுக்கு ஏற்ப போரில் பல நவீன உத்திகளை புகுத்திய தலைவரின் இந்த தாக்குதல் திட்டம் என்பது எதேச்சையாக எடுக்கப்பட்ட திட்டமாக இருக்க மாட்டாது. ஏனெனில் (1998) நவம்பர் மாவீரர் நாளைக்கு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் உலங்குவானூர்தி மூலம் மலர் தூவிய சம்பவம் விடுதலைப் புலிகளிடம் வான் படை இருக்கிறது என்ற உண்மையை வெளியுலகுக்கு அம்பலமாக்கிவிட்டது.

எனினும் அப்போது இடம்பெற்ற ஜெயசிக்குறு சமரிலோ அல்லது அதற்கு எதிரான பின்னர் நடைபெற்ற ஓயாத அலைகள் சமரிலோ விடுதலைப்புலிகள் வான் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகள் வான் படை குறித்து சிறிலங்கா அறிந்துகொண்டதன் பின்னர் தனது கேந்திர நிலையங்களின் பாதுகாப்பிற்கு வான் எதிர்ப்பு துப்பாக்கிகளுடன் படையினரை நிறுத்தியிருந்தது.

ஆனாலும் காலத்தின் தேவை கருதி தலைவர் வான் புலிகளை வெளியில் கொண்டுவந்தார். எதிரி எந்த வகையில் அடக்குமுறைகளை கையாளுகிறானோ அதேவழியில் சென்று பதிலடி கொடுப்பது என்பது



**சுழியோடி**

**26**

தலைவருக்கு கைவந்த கலை. அப்பாவி மக்கள் மீது வானிலிருந்து குண்டுகளை கொட்டி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொன்றொழித்த எதிரிக்கு தானும் அவ்வாறு தாக்கப்படுவோம் என்று புரியவைத்தது இந்த வான் தாக்குதல்.

ஆனால் எதிரியை போன்று பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தாது எந்தவித பாதிப்பும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடாது என்பதை தாக்குதலுக்கு சென்ற போராளிகளிடம் தலைவர் அவர்கள் வலியுறுத்தி அனுப்பிவைத்து நடத்திய தாக்குதல் இது.

இவ்வாறுஒரு இலக்குதவறாத தாக்குதலை உலகில் பல நாடுகளிடம் பயிற்சி பெற்ற சிறிலங்கா வான்படை கூட நடத்தியிருக்க முடியாது. வன்னியில் இருந்து (25ஆம் திகதி) புறப்பட்ட விடுதலைப்புலிகளின் இரு விமானங்கள் 26ம் திகதி அதிகாலை 5.45இற்கு சிறிலங்கா சர்வதேச கட்டுநாயக்கா விமான நிலையம் மேலாகப் பறந்து பயணிகள் விமானத்தளத்திற்கு அருகாமையில் இருந்த வான்படையின் தளத்தினை இலக்குவைத்து எட்டு குண்டுகளை வீசி அத்தளத்தை பாரிய சேதங்களுக்கு உள்ளாக்கிவிட்டு இலக்கு சரியானதா என்பதை அதன் மேலாக சாகசமாக ஒருமுறை வட்டமிட்டு உறுதிப்படுத்திக்கொண்டு பாதுகாப்பாக வன்னியிலுள்ள அதன் தளத்திற்கு திரும்பியது.

தரையால் வந்து நடத்திய தாக்குதலா அல்லது வானால் வந்து நடத்திய தாக்குதலா என சிறிலங்கா குழம்பிப் போயிருந்தது. வான் தாக்குதலை விடுதலைப்புலிகள் அறிவிக்காதுபோனால் அதனை ஒரு தரை வழியிலான தாக்குதலாக காண்பித்து படையினருக்கு ஏற்படக்கூடிய அச்சங்களை தவிர்ப்பதற்கும் சிறிலங்கா விரும்பியது என பின்னர் அறிய முடிந்தது.

ஆனால் விமானங்கள் திரும்பிய சில மணி நேரங்களில் விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதலை அதிகாரபூர்வமாக உரிமை கோரியதுடன், விமானங்களிலும்வான்புலிகளினதும் நிழற்படங்களை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தினார்கள். இந்த செய்திகள் உடனடியாக சர்வதேச ஊடகங்களில் தலைப்பு செய்தியாக வெளியானது.

இந்தியா வேண்டாத அச்சங்களை வெளியிட்டு தனது பாதுகாப்பை பலப்படுத்துவதாக கூறியது. தமிழக கரையோரங்களில் கண்காணிப்பு ராடர்களை நிறுவி விடுதலைப்புலிகளின் வான் பரப்புக்களை கண்காணித்து சிறிலங்காவுக்கு உதவுவதற்கு முனைந்தது. அதேவேளை இந்த தாக்குதலில் சேதங்கள் ஏற்படவில்லை எனக்கூறி சிறிலங்கா அரசாங்கம் இழப்பை மூடிமறைத்தது.

ஆனால் கட்டுநாயக்கா மீது 25 யூலை 2001ஆம் ஆண்டு கரும்புலிகள் நடத்திய தாக்குதலுக்கு இணையாக இந்த தாக்குதலும் சிறிலங்கா வான் படையினருக்கு பெரும் அழிவையும் தொடர் பொருளாதார இழப்புக்களையும் கொடுத்தது என்பதே உண்மை.




வான் படையினர் மூலம் தாக்குதல் நடத்துவது மாத்திரமல்ல தாக்கிவிட்டு திரும்பிச்செல்ல முடியும் என்பதையும் நிரூபித்து காட்டியதன் மூலம் போரரங்கின் போக்கை மாற்றிவிட்டனர் விடுதலைப்புலிகள் என இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

இந்த தாக்குதலால் பெரும் அவமானமும் அதிர்ச்சியும் அடைந்த சிறிலங்கா. இரணைமடு மற்றும் விமான தளங்கள் என்று கருதிய இடங்களில் குண்டு மழை பொழிந்தது. அத்துடன் விமான தளங்களையும் ஓடுபாதைகளையும் கண்டுபிடிப்பதற்காக வேவு விமானங்கள் வன்னியை வட்டமிடத் தொடங்கியிருந்தன.

இரவு பகல் என 24 மணி நேரமும் வேவு விமானங்கள் வன்னியை முற்றுகையிட்டு தேடுதலை மேற்கொண்டு இருந்தன. இவ்வாறு வந்த வேவு விமானம் ஒன்று திரும்பி போகவே இல்லை. விடுதலைப்புலிகளின் முயற்சி ஒன்றில் அந்த விமானம் வன்னி மண்ணில் விழுந்து உயிரை விட்டது.

இதன் பிற்பாடு தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வேவு விமானங்கள் பரப்பில் ஈடுபட்டிருந்தன.

இரவில் துல்லியமாக படம் எடுக்கக்கூடிய வேவு விமானம் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் சில நாடுகளிடம் இருந்து செய்மதியுடன் கண்காணிப்பு உதவியையும் சிறிலங்கா பெற்றுக்கொண்டது.

அத்துடன் இந்த வான் தாக்குதலை சர்வதேச அச்சுறுத்தலாக மாற்றி உலக நாடுகளின் ஆதரவை வளைத்துப் போடவும் சிறிலங்கா முயன்றது. 11.2001இல் அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் போன்று ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய விடுதலை புலிகளின் தாக்குதல் அதுவும் பொது மக்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படாமல் இராணுவ நிலைகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பயங்கரவாதமாக காண்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளை ஒடுக்கவேண்டும் என்று எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்தியாவின் ஆதரவு சிறிலங்காவிற்கு பலமாகக் கிடைத்தது. இதன் வெளிப்பாடுதான் ஒட்டுமொத்த நாடுகளின் ஆதரவுடன் விடுதலைப்புலிகளை அளிக்கும் நடவடிக்கை முன்னெடுக் கப்படுகிறது.

**தொடரும்...**

# இனப்படுகொலையை நியாயப்படுத்த சமூக ஊடக பிரபலங்களை விலைக்கு வாங்கும் இஸ்ரேல்



காசாவில் பாலஸ்தீன மக்களைப் படுகொலை செய்யத் துவங்கியதிலிருந்து இஸ்ரேலின் இனப்படுகொலையை மறைத்து பாலஸ்தீனத்திற்கு எதிராக போலிச் செய்திகளை சமூக ஊடகத்தில் பரப்புவதற்கு சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் ‘டிஜிட்டல் ஆர்மி’ பணம் கொடுத்து வருவது அம்பலமாகியுள்ளது. இதற்காக சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்திவரும் கணக்குகளுக்கு (Media Influencers) இஸ்ரேல் அரசு சார்பில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மற்றும் மெசேஜ்களின் ஸ்கிரீன் ஷொட்கள் (screenshot) வெளியாகியுள்ளன.

காசா பகுதியை இஸ்ரேல் ராணுவம் முற்றுகையிட்டு பாலஸ்தீனர்களின் வீடுகள், அவர்கள் பாதுகாப்பு தேடி தஞ்சம் புகுந்த மருத்துவமனைகள், தேவாலயங்கள், மசூதிகள், அம்புலன்ஸ் என அனைத்து இடங்களிலும் குண்டுகளை வீசி அழித்து வருகிறது. மேலும் அங்கு வாழும் பாலஸ்தீனர்களுக்கு அத்தியாவசியமான உணவு, குடிநீர், மின்சாரம், எரிபொருள், மருத்துவப் பொருட்களைத் தடுத்து சர்வதேச விதிகளை மீறி, இனப்படுகொலையில் ஈடுபட்டு வருகிறது.

இஸ்ரேல் தனது போர் குற்றங்களையும் இனப்படு கொலையையும் மறைத்து உலக மக்களின் அனுதாபங்களைத் தனது பக்கம் திருப்பவேண்டும் என்பதற்காகவும், தனது பயங்கர வாதத்தை நியாயப்படுத்திக் கொள்வதற்கும் போலி பிரச்சாரங்களை மேற்கொள் வதற்காக, உலகளவில் சமூக ஊடகத்தில் அதிக செல்வாக்கு செலுத்திவரும் நபர்களை அணுகி அவர்கள் மூலம் பல போலி செய்திகளை பரப்பிவருகிறது. அப்படி போலிப் பிரச்சாரத்திற்காக அணுகும் நோக்குடன் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் ஒன்று கசிந்துள்ளது.

இஸ்ரேலின் போலிப் பிரச்சாரக் குழு #HAMASisISIS மற்றும் #StandWithIsrael என்ற ஹேஷ்டேக்குகளுடன் எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள் என்பதும் கிம் கர்தாஷியன், மடோனா, கேல் கடோட், கேசி நீஸ்டாட் மற்றும் பல பிரபலங்கள் ஏற்கனவே இப்போலிப் பிரச்சாரத்தில் இணைந்துள்ளனர் என்பதும் அம்பலமாகியுள்ளது.

ஹமாஸை பயங்கர வாதிகளாகவும், இஸ்ரேலில் 40 குழந்தைகளின் தலையை கொய்து ஹமாஸ் அமைப்பினர் கொலை செய்துள்ளனர் என்றும் போர் துவங்கியபோது பொய் பிரச்சாரத்தை பரப்பியது இவர்கள்தான்.

இந்நிலையில் சில சமூக ஊடகப் பிரபலங்கள், இஸ்ரேலை அம்பலப்படுத்தியும் உள்ளனர். சாரா வாட்சன் என்பவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக தனது டிக் டொக் (TikTok) பக்கத்தில் வீடியோ வெளியிட்டு இருந்தார். அந்த ஆதரவை திரும்பப்பெற வேண்டும் என இஸ்ரேலிய அரசு தன்னை அணுகி வற்புறுத்தியதாகவும், அதற்காக லஞ்சம் கொடுக்க முன்வந்ததாகவும் தனது ட்விட்டர் பக்கத்தில் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், “நீங்கள் நினைப்பது நடக்காது, என் அறநெறியை உங்களால் விலைக்கு வாங்க முடியாது” என அவர் ஒரு வீடியோவில் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக அவர் இன்ஸ்டாகிராமில் பதிவிட்ட பதிவையும் நீக்குமாறு வலியுறுத்தப் பட்டுள்ளது. அதற்காகவும் ஒரு பெரிய தொகையை பேரம் பேசியதாகவும் அதையும் தான் மறுத்துவிட்டதாகவும் அவர் வீடியோவில் தெரிவித்துள்ளார்.

சுலைமான் அகமது என்ற மற்றொரு சமூக ஊடக பிரபலம், இஸ்ரேல் அரசு சமூக ஊடகத்தில் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு ஒவ்வொரு வீடியோவிற்கும் கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய் செலுத்துகிறது என்பதை வெளிப் படுத்தியுள்ளார். “இது தகவல்களை கட்டுப்படுத்தி உண்மைகளை திரிப்பதாகும். அமெரிக்காவைப் போலவே உலகில் உள்ள மக்களுக்கு நீங்கள் (இஸ்ரேலிய அரசு) செய்யும் கொடூரமான விஷயங்களை நியாயப்படுத்துவது” என்று அவர் இஸ்ரேலின் செயல்பாட்டை கடுமையாக விமர்சித்துள்ளார்.

கிட்டத்தட்ட 23 லட்சம் பாலஸ்தீன மக்களை உள்ளடக்கிய காசா பகுதியில் தோராயமாக 50,000 கர்ப்பிணி பெண்கள் உள்ளனர். நாளொன்றுக்கு 150 பிரசவங்கள் அங்கு நடைபெறுகின்றன.

இஸ்ரேல் மின்சாரம் வழங்குவதை நிறுத்திவிட்டதால் செல்ஃபோன் ஒளியைப் பயன்படுத்தி பிரசவம் பார்க்க வேண்டிய நிலைக்கு காசாவில் உள்ள மருத்துவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தெற்கு காசாவில் உள்ள நாசர் மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், தான் செல்ஃபோன் ஒளியைப் பயன்படுத்தி இரண்டு பெண்களுக்கு சிசேரியன் முறையில் பிரசவம் பார்த்ததாகவும், தனது கைகளைக் கழுவக்கூட மருத்துவமனையில் போதுமான நீர் இல்லை என்றும் என். பி.ஆர் (NPR) என்னும் அமெரிக்க சுதந்திர ஊடகத்திற்கு அளித்த நேர்காணலில் கூறினார்.

மின்சாரம் மட்டுமல்ல, தண்ணீர், மருந்துகள், எரிபொருள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதை இஸ்ரேல் நிறுத்திவிட்டது. குழந்தை களுக்குத் தாய்ப்பால் வழங்கும் பெண்கள், தங்களுக்குப் பால் சுரப்பதற்குக் கூடுதலாக நீர் அருந்த வேண்டிய தேவையுள்ளது. ஆனால், போதுமான குடிநீர் கிடைக்காததால் பல தாய்மார்களுக்குப் பால் சுரப்பதே நின்று போய்விட்டது.

காசாவுக்குத் தேவையான நீரில் 30 விழுக்காட்டை இஸ்ரேல் வழங்கி வந்தது. மீதமுள்ள நீர் தேவை கடல் நீரை சுத்திகரிப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இஸ்ரேல், தான் வழங்கி வந்த நீரை நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் கடல் நீரை சுத்திகரிப்பதற்குத் தேவையான மின்சாரம் மற்றும் எரிபொருளையும் நிறுத்திவிட்டது. தண்ணீரை மறுத்து நீர் என்பதை ஒரு பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் கையில் எடுத்துள்ளது.

சுகாதார நிறுவனம், மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் நீர் கிணறுகள், கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் சுகாதார சேவைகளை இயக்க போதுமான மின்சாரம் இல்லை என்றும், கழிவுநீர் மற்றும் திடக்கழிவுகள் தெருக்களில் குவிந்துள்ளதாகவும் அக்டோபர் 12-ஆம் திகதி தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து, இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களால் ஆறு நீர் கிணறுகள், மூன்று நீர் உந்து நிலையங்கள், ஒரு நீர்த்தேக்கம் மற்றும் 11 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு சேவை செய்யும் கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை ஆகியவை சேதமடைந்ததாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. இஸ்ரேலின் தாக்குதலால் காசா பகுதி பாலஸ்தீன மக்கள் அதிக உப்புக் கலந்த நீரைக் குடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தண்ணீரை பேரழிவு ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துவது இது ஒன்றும் முதல்முறையல்ல. இஸ்ரேலின் இந்த கொடூரத்தை வோட்டர் ஜஸ்டிஸ் (Water Justice) என்ற அமைப்பு தொடர்ந்து ஆவணப்படுத்தியுள்ளது.

மேற்குக் கரையில் (West Bank) உள்ள குடியிருப்புகளில் வாழும் 6,50,000 சட்டவிரோத இஸ்ரேலிய குடியேறிகளுக்கு, அங்குள்ள 30 இலட்சம் பாலஸ்தீனியர்களுக்கு ஒதுக்கப்படுவதை விட ஆறு மடங்கு அதிக தண்ணீர் ஒதுக்கப்படுகிறது. மேற்குக் கரையில் வாழும் இஸ்ரேலிய குடியேறிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 700 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதேவேளையில், பாலஸ்தீன மக்களுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 – 20 லிட்டர் தண்ணீர் மட்டுமே வழங்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையான குறைந்தபட்சம் 100 லிட்டர் / நபர் / நாள் என்ற பரிந்துரையைவிட இது மிகவும் குறைவானது.

கோடைக்காலத்தில் சட்ட விரோத யூத குடியேறிகளின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாலஸ்தீனியர்களுக்கான நீர் விநியோகத்தை இஸ்ரேல் 50 விழுக்காடு வரை குறைக்கிறது. மேற்குக்கரையில் கிட்டத்தட்ட 2,00,000 பாலஸ்தீனியர்களுக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால், யூத குடியேறிகளுக்கு தனிப்பட்ட பயன்பாடு, நீச்சல் குளங்கள், ஸ்பாக்கள், பண்ணைகள் மற்றும் பழத்தோட்டங்களுக்கு போதுமான நீர் குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது.

**மறவன்**



# புலி நீக்க அரசியல் என்பது ஈழத் தமிழரை ஒடுக்கவே!

Courtesy: தீபச்செல்வன்

2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிந்தைய காலத்தில் புலி நீக்க அரசியல் போருக்கு ஈழத் தமிழ் சமூகம் முகம் கொடுத்து வருகிறது.

கடந்த காலத்தில் புலிகளை அழிக்கிறோம் என்று கூறிக்கொண்டு, ஈழத் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது அரசு.

அதேபோல முள்ளி வாய்க்காலுக்குப் பிந்தைய காலத்தில் புலிகளை பற்றி நினைவுகளை ஒடுக்கும் நீக்கும் போர் என்ற பெயரில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதுடன் விடுதலைப் போராட்டம் சார்ந்த தடயங்களை அழிப்பதும் புலிகள் என்ற விம்பம் தமிழர்களின் அடையாளமாய் இருப்பதை துடைத்தழிப்பதுமான முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று வருகின்றது. அதனொரு பகுதியாய் யாழ். பல்கலைக்கழகத்திலும் புலி நீக்க அரசியல் முயற்சி ஒன்று இடம்பெற்ற போதும் பல்கலைக்கழக மாணவர்கள் தக்க பாடம் புகட்டியுள்ளனர்.

விடுதலைப் போராட்டம்

கொழும்பைச் சேர்ந்த பெண் தமிழ் சட்டத்தரணி ஒருவர் புலிகள் பாசிசவாதிகள் என்று கொழும்பில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசியிருந்தமை சமூக வலைத்தளங்களில் பெரும் எதிர்ப்பை உள்ளாக்கியிருந்தது.

சிங்கள மக்கள் மத்தியில் ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சார்ந்த நியாயங்களை நாம் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்றோம்.

விடுதலைப் புலிகளின் காலம், இன்றைய நாட்களில் நமக்கு பெரும் பாடங்களை புகட்டிக்கொண்டிருக்கிறது. சிங்கள மக்களும் கூட அதனை உணரத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில் எனது சிங்கள மொழியாக்க நூல்வெளியீடு கொழும்பில் நடந்தபோது அங்கு தலைவர் பிரபாகரன் குறித்தும் போராளிகள் குறித்தும் பேசிய வேளை சிங்கள மக்கள் அதனை ஏற்று உணர்ந்து கரங்களைப் பற்றிக்கொண்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவர்கள் எமக்கு வேறானவர்களில்லை என்பதையும், அவர்கள் எம் வீடுகள் தோறும் இருந்து எமது விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் தாய்நிலத்திற்குமாக உருவாகிய போராளிகள் என்பதும், சிங்கள மக்களுக்கு புலிகள் எதிரானவர்களல்ல என்பதை எமது தலைவர் அழுத்தமாக எடுத்துரைத்திருப்பதையும் கூறியமை அப் பேச்சின் சாரம்.

உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளுகிற காலம் ஒன்று வரவேண்டும். அப்படியான ஒரு சூழ்நிலைதான் ஈழத் தமிழ் மக்களின் விடுதலை தாகம் குறித்து சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளுகிறதாகவும் இருக்கும்.

பெண் சட்டத்தரணிக்கு எதிர்ப்பு

இந்த நிலையில் குறித்த பெண் சட்டத்தரணி யாழ். பல்கலைக் கழகத்திற்குள் ஒரு நிகழ்வில் பேச அழைக்கப்பட்டிருந்தார். எமது விடுதலைப் போராளிகளை பாசிசவாதிகள் என்று அழைத்தமைக்காக பெரும் கொந்தளிப்புடன் இருந்த தேசத்தில் அவர் பேச அழைக்கப்படுவதற்கு நிச்சயமாக எதிர்ப்பு எழுந்தே தீரும்.

இந்த நிலையில் குறித்த சட்டத்தரணியின் பேச்சுக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால் அவரது பேச்சு இடம்பெறவில்லை.

ஒடுக்கப்படுகிற ஒரு இனம், இப்படியான புறக்கணிப்புக்களையும் எதிர்ப்புக்களையும் தான் தமது போராட்டமாக மேற்கொள்ள இயலும். அதுவே இங்கும் நிகழ்ந்திருந்தது.

தவிரவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியமான களமாக பங்களிப்பை வழங்கியிருக்கிறது. அத்துடன் ஈழத் தமிழ் சமூகம் தொடர்ந்து எதிர்கொள்ளும் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழகம் குரல் கொடுத்தும் வருகின்றது.

ஜனநாயக முறையில் யாழ். பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் போராட்டங்களும் வெளிப்படுத்தும் குரல்களும் மிக முக்கியமானவை.

அத்துடன் ஒரு இனம் ஒடுக்குமுறையால் பல்வேறு அவலங்களை எதிர்கொள்ளுகின்ற போது அதற்கு எதிராக போராடுவதும் குரல் கொடுப்பதும் ஒரு அறிவுச் சமூகத்தின் கடமையாகும்.

ஆசிரியர் சங்கத்தின் அரசியல்

கடந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் இன ஒடுக்குமுறை சார்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். மாணவத் தலைவர்கள் இனக் கொலைக்கும் தாக்குதல்களும் ஒடுக்குமுறைகளுக்கும் அச் சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத் துள்ளார்கள்.

அத்துடன் பல ஆசிரியர்களும் மாணவர்களுடன் கொலை மிரட்டல்களுக்கு முகம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் கடத்தப்பட்டு பெரும் சித்திரவதைகள் செய்யப்பட்ட நிலையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சமூகமும் கூட மௌனமான ஒரு இனவழிப்புப் போரை முகம் கொடுத்தது வரலாறு.

இந்த நிலையில் குறித்த சட்டத்தரணியை பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து அவரை பேச வைக்க ஒரு சில ஆசிரியர்கள் முயற்சி எடுத்துள்ளனர்.

அண்மையில் அவர்கள் போராளிகளை பாசிசவாதிகள் என்று பேசிய பேச்சை யாழ். பல்கலைக்கழகத்திலும் பேச வைப்பதற்கான முயற்சியாகத்தான் இது நடந்தது.



கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது பல்வேறு அவதூறுகளை மேற்கொண்டு சர்வதேச அளவில் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக செயற்படக்கூடிய சிலர் யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகியமை இந்த அரசியலை முன்னெடுப்பதற்காகவே என்றும் அதற்காகவே ஆசிரியர் சங்கத்திற்குள் நுழைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு இனத்திற்கும் அதன் ஒப்பற்ற விடுதலைப் போராட்டத்திற்கும் எதிராக இவ்வாறு செயற்படுவது நியாயமற்றது. பெரும் அநீதிக்குத் துணைபோவதுமாகும்.

ஆசிரியர்களுக்கு மாணவர்கள் எதிர்ப்பு

இந்த நிலையில் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றின் வாயிலாக குறித்த சட்டத்தரணியின் பேச்சு நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அவரை மீண்டும் அழைத்து பேச வைக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு ‘அறிவுரை’ கூறியிருந்தது.

மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பது என்ற போர்வையில் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பதை தமிழ் சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

இந்த நிலையில் ஒரு சில ஆசிரியர்கள் அறிக்கை வாயிலாக மாணவர்களுக்கு எடுத்த ‘வகுப்பிற்கு’ மாணவர்கள் தமக்கு தெரிந்த வழிமுறையில் தமக்கு தெரிந்த மொழியில் போராட்டம் வாயிலாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

குறித்த அறிக்கையை மீளப் பெற வேண்டும் என்பதை மாணவர்கள் வலியுறுத்தினர். இதனால் ஆசிரியர் சங்கம் பின்வாங்கியது. தமது அறிக்கை மீளப்பெற்றது.

அத்துடன் குறித்த சட்டத்தரணி வெளியிட்ட போராளிகள் பாசிசவாதிகள் என்ற கருத்தை தாம் ஏற்கவில்லை என்றும் அறிவித்தது.

சில நேரங்களில் சில சூழல்களில் ஆசிரியர்களுக்கு மாணவர்களும் ‘பாடம்’ புகட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மாணவர்களின் மனநிலைக்கு எதிராகவும் தமிழ் இனத்தின் சூழ்நிலைகளுக்கு எதிராகவும் செயற்பட்ட இவ் ஒரு சில ஆசிரியர்கள் தமக்கு முன்னால் கடமையாற்றிய, கடமையாற்றி வரும் மூத்த ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பாடங்களை கற்று செயற்பட வேண்டும்.

அனைவருக்குமான பாடம்

எங்கள் போராளிகள் இந்த மண்ணில் நடாத்திய போராட்டம் தான் நாம் இன்றைக்கு ஓரளவு அடையாளத்துடன் வாழ்வதற்கான வெளியை தந்திருக்கிறது. அவர்கள் தான் எமக்கு அடையாளமும் குரலும் முகமுமாக இருக்கிறார்கள்.

தமிழ் சூழலில் எம் போராளிகளை பாசிசவாதிகள் என்று கூறி அரசுக்கு ஒத்தோடிகளாக செயற்பட முனைகிற அனைவரும் இதில் பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த ஈழத் தமிழ் சமூகமும் நேசிக்கின்ற போராளிகளை கொச்சைப்படுத்துகிற மனநிலையும் பேச்சும் ஒருபோதும் அறிவுநிலையாகாது. ஒருபோதும் ஆளுமையாகாது. மாறாக இழிநிலையாகவும் அரசுக்கு ஒத்தோடும் அரசியலாகவுமே கருதப்படும்.

இது தமிழ் சமூகத்தின் கூட்டுமனநிலை என்பதை இவர்கள் உணர வேண்டும்.
தமிழ் சமூகத்தின் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒப்பற்ற தியாகத்தினால் இயல்பாக உருவானது இந்த கூட்டு மனநிலை.

மக்களை புரிந்துகொள்ள எந்த அறிவும் ஒருபோதும் பயன்தராது. மக்களுக்கு எதிராக சிந்திக்கும் எந்த அறிவும் ஒருபோதும் நன்மை விளைவிக்காது.

ஒரு மக்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த சமூகமாக நாம் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும்.

இன்றும் பல்வேறு ஆக்கிரமிப்புக்களையும் ஒடுக்கு முறைகளையும் எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களை வீழ்த்துவதை அறிவென செய்வது பேரநீதியாகும்.

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்திய அரசு, தமிழ் மக்கள் மீது இந்திய - இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையிலான இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தைத் தீர்வாகத் திணிக்க முற்படுவது, ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சியுரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து, தேசிய இன முரண்பாட்டுக்குத் தீர்வுத்திட்டம் ஒன்றை வகுக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் தொடர்ச்சியான நிலைப்பாடாகும். இங்கு நாம், தமிழீழத் தேசியத் தலைவர் இது குறித்துக் கூறியதை நினைவிற்கொள்ள விரும்புகின்றோம். “நாம் இந்தியாவை எமது நேச சக்தியாகவே பார்க்கின்றோம். எமக்கு இந்தியாவின் நல்லெண்ணமும் உதவியும் அவசியம். அதேவேளை, இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு”.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

இன்று நாம் புதியதோர் சர்வதேசச் சூழமைவை எதிர்கொண்டு நிற்கின்றோம். பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையிலான அரசுகளின் மூலோபாயங்களுக்கு முகங்கொடுத்து நிற்கின்றோம். தாயகத்தில் தொடர்ச்சியாக எமது இன அடையாளங்களை அழித்து, திட்டமிட்டுத் தமிழ் மக்களின் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்டு, எமது அரசியல் வாழ்வின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் சிங்கள அரசை எதிர்கொண்டுள்ளோம்.

தமிழர்களின் நிலங்கள், பல்தேசிய நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்படுவதன் மூலமும் தமிழர்களின் தாயகம், வெளியாரின் முதலீட்டிற்குத் திறந்துவிடப்பட்டிருப்பதன் மூலமும் சிறிலங்கா அரச ஒத்துழைப்புடனான பொருண்மியத் திட்டங்கள் மூலமாகவும் தமிழர்களின் பொருண்மியப் பண்பாடு சிதைத்தழிக்கப்பட்டு தமிழர் தாயகத்தின் பொருண்மியம், தமிழர் கைகளிலிருந்து முற்றாக அகற்றப்பட்டவாறு தமிழீழத் தமிழர்களின் தேசிய இன வேர்கள் பிடுங்கியெறியப்பட்ட வண்ணம் உள்ளன.

தமிழ்த்தேசிய ஓர்மையினைச் சிதைக்கும் நோக்கோடு, ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திலுள்ள அக முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வதுடன் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அடையாள வேறுபாடுகளை வலியுறுத்தவும் புதிய வேறுபாடுகளைப் புகுத்தவும் தம்மாலான அத்தனை சூழ்ச்சிகளையும் உலக வல்லாண்மையாளர்களின் உளவு அமைப்புகளும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் உளவு அமைப்புகளும் தொடர்ந்து செய்துவருகின்றன. இதன் வெளிப்பாடாகவே, தமிழீழத் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களைச் சிதைத்து, மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி, விடுதலைச் சிந்தனையிலிருந்து தமிழ் மக்களை அகற்றுவதற்கான செயற்பாடுகள், பல குழுக்களால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இச்சூழலில் மக்களை விழிப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தாயகத்தில் பல ஆண்டுகளாக அரசியற் கைதிகளாகவுள்ள எம்மவர்களை விடுதலைசெய்யாது, தொடர்ந்தும் பலர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இதற்கு நீதி கேட்டு எமது மக்கள் சர்வதேசச் சமூகத்திடம் குரல்கொடுத்து வருகிறார்கள். காணி அபகரிப்பு, அரசியற்கைதிகள் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான போராட்டங்களென பல வழிகளிலும் சர்வதேசத்திடம் நீதிவேண்டிப் போராடிவருகின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலைமை தொடர்பில் முடிவுகள் ஏதுமின்றி, அவர்களது உறவுகளும் சாவடையும் அவலநிலை இன்றுவரை தொடர்கிறது. முன்னாள் போராளிகளின் நிலைமை துன்பத்திற்கிடமாகவே ஒவ்வொரு நாளும் நகர்கின்றது. தான் நினைத்த நேரத்தில் யாரையும் கைது செய்யலாம், எவ்வழக்கின் கீழும் தண்டிக்கலாம் என்ற நிலையிலும், சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பலர், சந்தேகத்திற்கிடமான முறையில் சாவடைந்தும் வருகின்றனர். இதேவேளை, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பலரும் பாதுகாப்பின்றிச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பௌத்த சிங்களப் பேரினவாத அரசு, திட்டமிட்டே அவர்களுக்கான அடிப்படை உதவிகளை வழங்காது தவிர்த்து வருகின்றது. இவற்றுக்கெதிராகத் தன்னெழுச்சியாகப் போராடிவரும் மக்களின் நீதிக்காக நாமும் தொடர்ந்து போராடுவோம்.

புலம்பெயர் தேசங்களில் தொடர்ச்சியான அரசியற்சந்திப்புகள், தமிழின அழிப்பிற்கு நீதிகோரி நடைபெறும் மக்கள் போராட்டங்கள், ஈருருளிப்பயணங்கள், ஒளிப்படக் காட்சிப்படுத்தல்கள், கவனயீர்ப்புப் போராட்டங்கள், நாடுகள் வாரியாக நிறைவேற்றப்படும் தமிழின அழிப்பிற்கு எதிரான தீர்மானங்கள், தமிழினப் படுகொலையாளர்களுக்கு எதிரான கண்டனப்போராட்டங்கள், எமது நீதிக்கான சட்டரீதியான முன்னெடுப்புக்கள், எமது விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்கும் வகையில்மேற்கொள்ளப்படும்பொய்ப் பிரச்சாரங் களுக்கெதிராக இளை யோரால் சமூக வலைத்தளங்களில் நடாத்தப்படும் விழிப்புணர்வுகளென பல வழிகளிலும் போராடிவரும் இச்சூழமைவில், எமது ஒன்றுபட்ட சக்தியைச் சிதைக்கும் நோக்குடன் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்கொண்டு செயற்பட்டுவரும் எமது மக்கள், தேசியச் செயற்பாட்டாளர்கள், இளையோர்கள், தமிழின உணர்வாளர்கள் அனைவரையும் நாம் பாராட்டுவதுடன், தொடர்ந்தும் ஐ.நா பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றங்கள், நாடுகள் வாரியாகத் தீர்ப்பாயங்களென நாம் நகரவேண்டியுள்ளதால், இவற்றை வெற்றிகரமாகச் செய்துமுடிப்பதற்கு எமது வாழ்விட நாடுகளின் அரசுகள், அரசியற்பிரமுகர்கள், மனிதவுரிமை அமைப்புகள், சட்டவல்லுனர்களென அனைவரையும் நாடி எமது விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்தும் தார்மீகப்பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

அன்பார்ந்த தமிழக மக்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாய்மடியாகத் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்களே என்றும் இருந்துவருவதுடன், ஈடிணையற்ற ஈகங்களைத் தமிழீழ விடுதலைக்காகத் தமிழினப்பற்றுடன் செய்துவருகின்றீர்கள். இவ் வையகத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தாயகமாகத் தமிழ்நாடே இருக்கிறது. எமது மொழியையும் பண்பாட்டையும் வரலாற்றையும் தொல்லியலையும் அறிவார்ந்து வளர்த்துக்காக்கும் ஆற்றல்வளம், உங்களிடமே ஒப்பீட்டளவில் கூடுதலாகவுள்ளது. கட்டமைப்புசார் தமிழின அழிப்புக்கு எதிராக சுயாதீன சர்வதேச விசாரணைக்கு இந்திய நடுவண் அரசின் ஆதரவைப் பெறும்வகையில், அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன், எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்குவதற்காகவும் தொடர்ந்தும் குரல் எழுப்புமாறு வேண்டிநிற்கின்றோம். தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து குரல்கொடுத்துவரும் தமிழக உறவுகளுக்கு, எமது அன்பையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பார்ந்த இளையோர்களே!

எமது இனத்தின் பண்பாட்டையும் அடை யாளங்களையும் பாதுகாத்து, தமிழீழ விடுதலைப் பயணத்தில் தற்பொழுது நீங்கள் முன்னெடுக்கும் பணியானது மிகக்காத்திரமானதாக அமைந்துவருவதுடன், அது தமிழின அழிப்புச் செய்துவருகின்ற சிங்கள அரசை இன்று அச்சமடையச்செய்துள்ளது. தாயகத்தில் தொடரும் தமிழின அழிப்பிற்கு எதிராகவும் தமிழீழத் தனியரசு அமைக்கும் இலக்கு நோக்கியும் எமது விடுதலைப்போராட்ட நியாயத்தையும் எமது மக்கள்படும் அவலத்தையும் சர்வதேசச் சமூகத்திடம் வெளிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு உங்களிடம் உண்டு. தாயகத்து மக்களின் பாதுகாப்பும் பலமும் பெருமளவு உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. பல்தேசிய இனங்களின் ஆதரவை எமது விடுதலைக்கான பயணத்தை நோக்கித் திருப்பவேண்டிய பாரிய பொறுப்பையும், சமரசமற்ற வகையில் எமது இனத்தின் விடுதலைக்காகக் குரல்கொடுக்க வேண்டிய கடமையையும் இளைய சமுதாயத்தின் கைகளில் வரலாறு ஒப்படைத்திருக்கின்றது. எனவே, பல தியாகங்களாலும் அர்ப்பணிப்புக்களாலும் வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்த, இளையோர்கள் தொடர்ந்தும் முன்வரவேண்டும் என வேண்டி நிற்கின்றோம்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழத் தேசியத் தலைவரின் மூலோபாயச் சிந்தனையின் அடிப்படையில், பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைகளிலிருந்து அடிமைத் தடைகளை உடைத்தெறிந்து, தமிழீழத்தேச அரசை நிறுவும் ஆற்றலை, எமது மாவீரர்களின் ஈகங்கள் எமக்குக் கொடுத்திருக்கின்றன. சவால்கள் மிகுந்த காலப்பகுதியில் மண்டியிடா வீரத்துடன் களமாடிய மாவீரர்களின் உளவுரணையும் அர்ப்பணிப்பையும் நெஞ்சில் நிறுத்தி, தமிழீழத் தேசத்தின் இறைமையை எந்நிலைவரினும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்ற விடுதலை உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம்.

## உன்னைப் புறக்கணித்துவிட்டதாக ஏன் கதறுகிறாய்...?

யார் உன்னைப் புறக்கணித்தால் என்ன? இந்தப் பிரபஞ்சம் எப்போதும் உன்னைத் தன் அன்பால், கருணையால் அரவணைத்துக் கொண்டுள்ளது.

சூரியனோ, சந்திரனோ என்றாவது உன்னைப் புறக்கணித்துத் தன் ஒளியை உனக்குத்தர மறுத்ததுண்டா?

இயற்கை உன்னை ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. உன்மீது எல்லை யில்லா கருணை கொண்டிருக்கும் இயற்கையை மறந்து, நீ மனிதர்களின் புறக்கணிப்பு குறித்துக் கவலை கொள்கிறாய்.

உண்மையில் புறக்கணிப்பு குறித்துச் சற்று ஆராய்ந்து பாரேன். அது மனதின் வேலை.

உண்மையில் எத்தனையோ மனிதர்கள் உன்னைப் புறக்கணிப்பதுண்டு.

நீயும் எத்தனையோ மனிதர்களைப் புறக்கணிப்பதுண்டு.

எல்லாப் புறக்கணிப்புகளும் உனக்கு வலியைத் தருவதில்லை.

சில மனிதர்களை மனம் கூழாங்கற்களாக நினைக்கிறது.

சில மனிதர்களை மனம் விலையுயர்ந்த வைரம் போல் மிக உயர்வாக நினைக்கிறது. அவர்களின் அன்பிற்கும், அங்கீகாரத்திற்குமாய் ஏங்குகிறது.

கூழாங்கற்களின் புறக்கணிப்பு வலியைத் தருவதில்லை.

வைரத்தின் புறக்கணிப்பு வலியைத் தருகிறது.

இது மனதின் "உயர்வு-தாழ்வு மனப்பான்மை" என்ற குணத்தினால் விளைவது. அந்த மனப்பான்மையினால் பிறரை உயர்வாகக் கருதும்போது உன்னை நீயே தாழ்வாகக் கருதுகிறாய்.

பிறரைத்தாழ்வாகக்கருதும்போது உன்னை நீயே உயர்வாகக் கருதிக்கொள்கிறாய்.

உன்னை நீ தாழ்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பு வலியைத் தருகிறது.

உன்னை உயர்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பை வலியில்லாமல் உன்னால் கடந்து செல்ல முடிகிறது.

இவையனைத்தும் உன் மனதின் கற்பனையான நிலைப்பாடுகளே அன்றி உண்மையில் இயற்கையில் அத்தகைய உயர்வு-தாழ்வு ஏதுமில்லை.

சிறு புல்லும், பெருஞ்சூரியனும் இயற்கையில் சமமாகவே உள்ளன.

ஆக இப்போது உனக்குத் தேவை சமநோக்குப் பார்வை. தியானம் செய். இயற்கையை நேசி. வலிகள் மறையும். பாராட்டுக்காக ஏங்கும் நேரத்தில், நீ எத்தனை பேரைப் பாராட்ட மறந்திருக்கிறாய் என்று எண்ணிப் பார். இது இயல்பே என எண்ணு.

வேகமாகச் சென்று கொண்டு இருக்கும் போது பார்க்கும் இயற்கை அழகை நின்று பார்க்க நேரம் இருப்பதில்லை. அதற்காக இயற்கை தம் அழகை குறைத்து கொள்வதில்லை. அது இயல்பாய் இருக்கிறது.

அதுபோல் இயல்பாய் கடமையைச் செய்.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக சாதனை படைத்த விராட்



ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 50வது சதத்தை பூர்த்தி செய்து விராட் கோலி உலக சாதனை படைத்துள்ளார்.

13வது உலக கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்றுவரும் நிலையில், இந்தியா-நியூசிலாந்து இடையிலான முதல் அரையிறுதி போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய இந்திய அணியில் தொடக்க வீரர் ரோகித் சர்மா 29 பந்துகளில் 47 ஓட்டங்கள் குவித்து சவுதி பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஆனால் ஆட்டத்தின் வேகத்தை குறைக்காத மற்றொரு தொடக்க வீரர் ஷுப்மன் கில் 65 பந்துகளில் 79 ஓட்டங்கள் அதிரடியாக குவித்தார். ஆனால் திடீரென ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வு பெற்று பெவிலியன் திரும்பினார்.

**உலக சாதனை படைத்த விராட் கோலி**

இந்திய அணி ரன் வேட்டை சிறிதும் குறைத்து கொள்ளவில்லை, பெரிய எதிர்பார்ப்புடன் களமிறங்கிய இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 106 பந்துகளை எதிர்கொண்டிருந்தபோது விராட் கோலி தன்னுடைய 50வது ஒருநாள் சதத்தை பூர்த்தி செய்து உலக சாதனை படைத்தார். இறுதியில் 113 பந்துகளை எதிர்கொண்டு இருந்த விராட் கோலி 117 ஓட்டங்கள் குவித்து சவுதி பந்தில் விக்கெட்டை இழந்தார்.

## உலகக் கிண்ணத்தை வெல்வோம் – பிரமோத்ய விக்ரமசிங்க



இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வேயில் நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கான தகுதிச் சுற்றுப் போட்டித் தொடரில் 12ஆவது இடத்தில் இருந்த போதிலும், அந்தப் போட்டியின் பின்னர் 09ஆவது இடத்திற்கு வந்ததாகவும், அந்த வெற்றி மனப்பான்மையுடன் இலங்கை உலகக் கிண்ணத்திற்குள் நுழையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் தேர்வுக்குழு தலைவர் பதவியிலிருந்து நான் விலக மாட்டேன். அமைச்சர் வேண்டுமானால் தன்னை பதவியில் இருந்து நீக்கலாம் என இன்னும் ஐந்தாண்டுகளில் தான் கட்டமைத்த இளைஞர் அணி எந்த நிலையில் இருக்கும் என்று பொறுத்திருந்து பாருங்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

## பென் ஸ்டோக்ஸை விடுவிக்க முடிவு

**கடந்த ஐபிஎல் தொடரில் இங்கிலாந்து சகல துறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ரூ.16.25 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. ஆனால் காயம் காரணமாக கடந்த தொடரில் பென் ஸ்டோக்ஸ் களமிறங்கவில்லை. இந்தியாவில் தற்போது நடைபெற்று வரும் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்காக தனது ஓய்வு அறிவிப்பை பென் ஸ்டோக்ஸ் திரும்ப பெற்று இருந்தார்.**

**எனினும், அவரது ஆட்டத்திறன் பாதிக்கப்பட்டு இருப்பதால் அடுத்த ஐபிஎல் தொடருக்கான சென்னை அணியின் வீரர்கள் பட்டியலில் இருந்து பென் ஸ்டோக்ஸை சிஎஸ்கே நிர்வாகம் விடுவிக்க முடிவு செய்து இருப்பதாக தெரியவந்துள்ளது.**

## புதிய பாகிஸ்தான் கேப்டனை அறிவித்த கிரிக்கெட் வாரியம்




பாகிஸ்தான் அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து பாபர் அசாம் ராஜினாமா செய்துள்ளார். உலகக் கிண்ண போட்டியில் இருந்து வெளியேறிய பாகிஸ்தான் இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண போட்டி தொடரில் பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுக்கொள்ளாமல் போட்டியில் இருந்து வெளியேறியது.

அரையிறுதிக்கு இந்தியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தகுதி பெற்றிருந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பாகிஸ்தான் அணி 9 லீக் போட்டிகளில் 4 மட்டுமே வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் 5வது இடத்தை பிடித்திருந்தது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளரான மோர்னே மோர்கல் தனது பொறுப்பில் இருந்து ராஜினாமா செய்துள்ளார் என்ற தகவல்கள் வெளியாகியது. அதையடுத்து அணியின் கேப்டனும் ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

**ராஜினாமா செய்த பாபர் அசாம்**

பாபர் 2020 முதல் பாகிஸ்தான் கேப்டனாக இருந்து வந்தார். அவர் டி20 அணிக்கு பொறுப்பேற்ற ஒரு வருடத்திற்குப் பிறகு ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கும் முன்வகித்தார். ஆனால் இந்தியாவில் நடந்து வரும் கிரிக்கெட் உலகக் கோப்பையில் இருந்து பாகிஸ்தான் வெளியேறியதால் 29 வயதான அவர் பதவி விலக வழிவகுத்துள்ளது.

பாபர் தனது சமூக ஊடகத்தில் இது குறித்து ஒரு அறிக்கையும் வெளியிட்டு இருந்தார். மேலும் இந்த குறிப்பிடத்தக்க பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

**புதிய கேப்டன்**

இதையடுத்து பாகிஸ்தான் அணியின் புதிய கேப்டனை கிரிக்கெட் வாரியம் நியமித்துள்ளது. அதன்படி, டி20 போட்டிகளுக்கு சஹீன் ஷா அஃப்ரிடியும், டெஸ்ட் போட்டிகளுக்கு ஷான் மசூத்-ம் கேப்டனாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெட்ர்டிக் தொடர் சம்பியனாக முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ்

இலங்கை செஸ் சம்மேளன ஏற்பாட்டில் தேசிய யூத் செஸ் சம்பியன்சிப் 2023 அம்பாறை டி.எஸ். சேனநாயக்கா தேசிய பாடசாலையில் 2023/11/11,12 (சனி, ஞாயிறு) திகதிகளில் நடைபெற்றது. இதில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மாணவி முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ் 09 வயது பெண்கள் பிரிவு சதுரங்க போட்டியில் வெற்றியீட்டி தொடர் 3 வருடகாலமாக அம்பாறை மாவட்ட சம்பியன் எனும் பட்டத்தை தக்கவைத்துள்ளார்.

இதில் 09 வயது பிரிவின் கீழ் விளையாடி அனைத்து போட்டிகளிலும் வெற்றியீட்டி முபீன் பாத்திமா சபிலுல் லமாஹ் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவிருக்கும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதில் வெற்றி பெறும் வீரர்கள் தேசிய ரீதியில் விளையாடக்கூடிய வாய்ப்பையும், சர்வதேச மட்டத்தில் விளையாடக் கூடிய வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். (நூருல் ஹுதா உமர்)



# உலக வலம்

## றொறன்ரோவில் வன்முறைகளுக்கு இடமில்லை - நகர முதல்வர்

றொறன்ரோவில் வன் முறைகளுக்கு இடமளிக்கப்படாது என நகர முதல்வர் ஒலிவியா சொவ் கோரியுள்ளார். காசா பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் போரைத் தொடர்ந்து, றொறன்ரோவில் பல்வேறு வெறுப்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் முழுமையான அடிப்படையில் விசாரணை நடத்தப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். வாழ்நாள் முழுவதிலும் சமாதானத்தை வலியுறுத்தி வரும் தமக்கு இவ்வாறான வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளார்.



ஹமாஸ் போராளிகள் பணய கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் இஸ்ரேல் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்களின் ஊடாகவே உடனடியாக சமாதானத்தை எட்ட முடியும் என சொவ் தெரிவித்துள்ளார்.

## அதிபர் தேர்தல் பங்கேற்பு தொடர்பில் முடிவு எடுத்த குடியரசு தலைவர்



அமெரிக்காவில் அடுத்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. அமெரிக்காவில். ஜனநாயக கட்சி அல்லது குடியரசு கட்சியை சேர்ந்தவர்களே அதிபர்களாக மாறி மாறி பதவி வகிப்பது வழக்கம். தற்போது ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜோ பைடன் அதிபராக உள்ளார். இவரை எதிர்த்து குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தீவிரமாக களம் இறங்கியுள்ளார்.

அந்நாட்டு வழக்கப்படி. அதிபர் தேர்தலில் போட்டியிட ஒரு கட்சியின் சார்பில் களமிறங்க விரும்புபவர்கள். நாட்டின் பல இடங்களில் அக்கட்சியின் சார்பாக நடைபெறும் விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டும். அப்போது அமெரிக்கா எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அதனை கையாள தங்கள் கைவசம் உள்ள திட்டங்கள் ஆகியவை குறித்து அவர்கள் விளக்க வேண்டும். அது குறித்து வரும் கேள்விகளையும் திறமையாக கையாண்டு சிறப்பான முறையில் பதிலளிக்க வேண்டும். இதற்கு பிறகே யாரை கட்சிகள் அதிபராக களம் இறக்க போகின்றன என்பது தெரிய வரும்.

குடியரசு கட்சி சார்பில் களம் இறங்க டொனால்ட் டிரம்ப் தீவிரமாக இருந்தாலும். அவர் மீது அந்நாட்டின் பல மாநிலங்களில் கிரிமினல் குற்ற வழக்கு விசாரணை நடைபெறுவதால். அந்த வழக்குகளின் தீர்ப்பை பொறுத்தே அவரது அரசியல் எதிர்காலம் அமையும். டிரம்பிற்கு அடுத்த இடத்தில் இந்திய வம்சாவளி தொழிலதிபரான விவேக் ராமசாமி முன்னிலையில் உள்ளார். இவர்களை தவிர. இப்போட்டியில் பங்கு பெற்று அமெரிக்க செனட்டர் டிம் ஸ்காட் பிரச்சாரம் செய்து வந்துள்ளார். தொடக்கத்தில் பல இடங்களில் அவருக்கு இருந்து வந்த ஆதரவு. நாட்கள் செல்ல செல்ல குறைய ஆரம்பித்தது. டிம் தற்போது போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

டிம் ஸ்காட்

இவர் அமெரிக்காவின் சவுத் கரோலினா மாநிலத்தை சேர்ந்தவர் என்பதும் மற்றொரு குடியரசு கட்சி போட்டியாளரான நிக்கி அதே மாநிலத்தை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. "பூமியிலேயே அற்புதமான மனிதர்களான வாக்காளர்கள் என்னிடம் 'இப்போது வேண்டாம் டிம்' என கூறுவதாக தெரிகிறது" என தனது முடிவு குறித்து டிம் தெரிவித்தார். கடந்த மே மாதம் முதல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்த டிம். "டொனால்ட் டிரம்ப்பை விட தான் எந்த வகையில் சிறப்பானவர்" என்பதை விவாதங்களில் விளக்க தவறியதால் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டதாக அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில். டிம் ஸ்காட்டை இதுவரை ஆதரித்து பிரச்சாரங்களுக்கு நிதியுதவி செய்து வந்த தொழில் நிறுவனங்கள் மற்றொரு போட்டியாளரான நிக்கிக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாஸ்போர்ட் வழங்குவதை நிறுத்திய பாகிஸ்தான்

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் லேமினேஷன் பேப்பர் தட்டுப்பாடு காரணமாக, புதிய பாஸ்போர்ட் வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாஸ்போர்ட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் காகிதத்தை பாகிஸ்தான், பிரான்சில் இருந்து இறக்குமதி செய்கிறது.

இந்நிலையில் வெளிநாடுகளுக்கு செல்ல பாஸ்போர்ட் பெற காத்திருக்கும் மாணவர்கள் மற்றும் வேலை அல்லது ஓய்வுக்காக பயணம் செய்யத் திட்டமிடுபவர்கள் உட்பட பலர் தாமதத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

அதேவேளை நிலைமை விரைவில் கட்டுக்குள் வரும் என அரசு உறுதி அளித்துள்ள நிலையில், பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இதற்கிடையில், பெஷாவரில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், 3000 முதல் 4000 பாஸ்போர்ட்டுகளை வந்த நிலையில் தற்போது தினமும் 12 முதல் 13 பாஸ்போர்ட்களை மட்டுமே அச்சிட முடிகிறதாக கூறியுள்ளாராம். அதேவேளை, பாகிஸ்தானில் இதுபோன்ற நெருக்கடி ஏற்படுவது இது முதல் முறையல்ல. கடந்த 2013 ஆம் ஆண்டில், அச்சுப்பொறிகள் மற்றும் லேமினேஷன் பேப்பர்களின் பற்றாக்குறை காரணமாக பாஸ்போர்ட் அச்சிடுதல் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளியுறவுத்துறை மந்திரியாக டேவிட் கேமரூன் நியமனம்



வெளியுறவுத்துறை மந்திரியாக டேவிட் கேமரூனை பிரதமர் ரிஷி சுனக் நியமித்துள்ளார். பாலஸ்தீன ஆதரவு பேரணியை பொலிஸார் கையாண்ட விதம் குறித்து விமர்சித்ததால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து இங்கிலாந்து வெளியுறவுத்துறைமந்திரிபொறுப்பில்இருந்து சுவெல்லா பிரேவர்மென், நீக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து, பிரித்தானிய மந்திரி சபையில் மேலும் ஒரு அதிரடி மாற்றத்தையும் ரிஷி சுனக் மேற்கொண்டுள்ளார். அதன்படி, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான டேவிட் கேமரூன் வெளியுறவுத்துறை மந்திரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டேவிட் கேமரூன் கடந்த 2010-2016 முதல் பிரித்தானிய பிரதமராக பதவி வகித்தார். 2016 ஆம் ஆண்டு பிரெக்சிட் பொது வாக்கெடுப்பு தோல்வி அடைந்ததால், பிரதமர் பதவியில் இருந்து டேவிட் கேமரூன் பதவி விலகினார். அதன்பிறகு கிட்டத்தட்ட 6 ஆண்டுகளுக்கு பிறகு முக்கிய பொறுப்புக்கு டேவிட் கேமரூன் வந்துள்ளார். அதேபோல், வெளியுறவுத்துறை மந்திரியாக பதவி வகித்து வந்த ஜேம்ஸ் கிளவர்லி, உள்துறை மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## டைனோசர் காலத்தைச் சேர்ந்த பாலூட்டி இனம் கண்டுபிடிப்பு



டைனோசர் காலத்தைச் சேர்ந்த முட்டையிடும் பாலூட்டி இனமான எகிட்னா என்ற விலங்கை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பப்புவா நியூ கினியா நாட்டிலுள்ள சைக்கிளுப்ஸ் மலையில் கடந்த 62 ஆண்டுகளுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்ட எச்சத்தை ஆய்வு செய்தபோது அது எகிட்னா என்ற விலங்கின் எச்சம் என ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடிப்படையாக கொண்டு மேற்கொண்ணப்பட்ட ஆய்வில் 20 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் டைனோசர் வாழ்ந்த அதே காலத்தில் எகிட்னா என்ற முட்டையிடும் பாலூட்டி இனமும் வாழ்ந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. எகிட்னா உயிரினம் அழிந்துவிட்டதாகவே கருதிய ஆய்வாளர்கள் நெதர்லாந்தின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகமான நேட்ச்சுரல்ஸ்யின் காப்பக அறையில் அந்த எச்சத்தை பாதுகாப்பாக வைத்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பப்புவா நியூ கினியாவின் அண்டை நாடான இந்தோனேசியாவிலும், விரிந்து பரந்துள்ள சைக்கிளுப்ஸ் மலையில் மீண்டும் மேற்கொள்ளபட்ட ஆய்வில் எகிட்னா என்ற உயிரினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 20 கோடி ஆண்டுகளை கடந்து வாழ்ந்து வரும் எகிட்னா இனத்தை சேர்ந்த விலங்கை ஆராய்ச்சியாளர்கள் படம் பிடித்து வெளியிட்டமை வரலாற்று சாதனையாக பார்க்கப்படுகிறது.

## 800 கோடியைக் கடந்த உலக மக்கள் தொகை

உலக மக்கள் தொகை தொகை 800 கோடியைக் கடந்து விட்டதாக அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம் தெரிவித்துள்ளது. கடந்த செப்டம்பர் 26 ஆம் திகதி இந்த எண்ணிக்கையை கடந்திருக்கலாம் எனவும் கணிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில். உலக மக்கள் தொகை கடந்த செப்டம்பரில் 800 கோடியைக் கடந்துவிட்டது. கடந்த ஆண்டு நவம்பர் மாதமே. உலக மக்கள் தொகை இந்த எண்ணிக்கையை அடைந்துவிட்டதாக ஐ.நா சபை மதிப்பிட்டிருந்தது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு முறை நாட்டுக்கு நாடு வேறுபடுவதால் இந்த முரண்பாடு நிலவுகிறது. உலக மக்கள் தொகை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த 2000 ஆம் ஆண்டு 600 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை. தற்போது 800 கோடியாக அதிகரித்துள்ளது. மக்களின் சராசரி வயது 32ஆக அதிகரித்துள்ளது. எதிர்வரும் 2060 ஆம் ஆண்டு அது 39



ஆக உயரும். கனடா போன்ற நாடுகளில் முதியோர்களின் இறப்பு விகிதம் குறைந்துள்ளது.

கடந்த 1960 - 2000 வரையிலான காலகட்டத்தில் உலக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 2 மடங்காக இருந்த நிலையில். தற்போது அது குறைந்துள்ளது. பெண்கள் கருவுறும் விகிதம் தொடர்ச்சியாக குறைந்து வருவது கடந்த 50 ஆண் டுகளாக உலக மக்கள் தொகை குறைவான விகிதத்தில் அதிகரித்து வருவதற்கான காரணம் ஆகும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘கிழக்கில் சிவந்த சுவடுகள்’

கிழக்குப் படுகொலைகளை வெளிச்சம் போட்டு காட்டிய சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் அவர்கள் எழுதிய ‘கிழக்கில் சிவந்த சுவடுகள்’ என்கிற நூல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் *04-11-2023* அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டதுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். தினப்புயல் ஊடக நிறுவனத்தின் சார்பாக ஊடகவியலாளர் தனபாலசிங்கம் தன்னியா அவர்கள் கலந்துகொண்டு, நூலாசிரியரிடம் இருந்து ‘கிழக்கில் சிவந்த சுவடுகள்’ என்னும் நூலைப் பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.












**கடந்த 11.11.2023 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் அவர்களினால் 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' என்கிற நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இவ் வெளியீட்டு வைபவத்தில் முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார். இங்கு ஊடகவியலாளர்கள். கவிஞர்கள். சமூக சேவையாளர்கள். தினப்புயல் ஊடக நிறுவனத்தின் பணிப்பாளர். புத்திஜீவிகள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.**























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.11.2023 அன்று வெளியிடப்பட்டது.